[illegible]

[illegible] 7 [illegible] 10

Cat. 1936

[illegible]

[illegible]

N 34:7 40.

18716C

300 1300.

Registered No. M. 2330.

SIDDHANTHAM
Vol. 7 No. 10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1934
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் எ 7 | பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 1934 ௵ அக்டோபர்மீ | இதழ் ௰ 10

உள்ளுறை பக்கம்

சமாஜ விசேஷ மகாநாடு ... ... ... உஅக
நல்வரவேற்புக் கவி ... ... ... உகங
ஐய வினா ... ... ... உகரு
ஒழிவிலொடுக்கம் ... ... ... உகஅ
புலவேந்தர் புனிதமொழி ... ... ருகஞ
திருவாசகம் உரையுடன் ... சகூரு-சஅ0
சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... கசரு-கக0

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
திருவருளகம்", 22-A, கல்லுகாரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

உ

# முக்கிய அறிக்கைகள்

1. நமது சமாஜக் காரியாலயம் 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. சென்னையிலிருந்து "திருவருளகம்", 22-A, கல்லுக் காரத் தெரு, மயிலாப்பூர் என்ற விலாசத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

2. நமது சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகள் 1934௵ நவம்பர்௴ 18௳ ஞாயிற்றுக்கிழமை யன்று சென்னையிலும் பிற இடங்களிலும் நடைபெறும். நடைபெறும் வேளை, விலாசம் முதலிய விவரங்கள் விண்ணப்பித்தோருக்கு நேரில் தெரிவிக்கப்படும்.

3. நமது சமாஜத்தின் இருபத்தொன்பதாம் ஆண்டு நிறை விழாவை நடத்தும் இடம், தலைவர் முதலிய பல பொருள்களைப் பற்றித் தீர்மானிக்கச் சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகாநந்த நிலைய'த்தில் 1934௵ அக்டோபர்௴ 20௳ சனிக்கிழமை காலை 8 மணிக்குக்கூடும். அன்று பொதுக் கூட்டத்துக்குத் தேவையான நிறைவெண் இல்லாவிடின், அப் பொதுக்கூட்டம் அதேயிடத்தில் அடுத்தநாள் காலை வருபவர்களைக் கொண்டு நிறைவேறும். இவ்வாண்டு விழாவைப்பற்றிய தத்தம் கருத்துக்களை அங்கத்தினர் உடனே எழுத்துமூலம் தெரிவிக்குமாறு வேண்டுகிறேம்.

இங்ஙனம் :

மயிலை,
10-10-1934.

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

---

## இராயப்பேட்டையில் ஞானியார் சுவாமிகள் விஜயம்

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் முப்பதாம் ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்து நான்கு நாட்கள் விழாவை மிகச் செம்மையாக நடத்திவைத்த நற்செய்தியை அளவற்ற மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம். நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சபை சில ஆண்டுகளாகச் சில முக்கிய அங்கத்தினரின் ஒத்துழையாமை, ஒற்றுமையின்மை, ஊக்கக்குறைவு முதலிய காரணங்களால் சிறப்பாகத் தொண்டாற்றாத நிலையிலிருந்தது இச்சபையில் அநுதாபமுடைய பற்பல நேயர்கட்குப் பெருந்துன்பத்தை விளைத்தது. இந்நிலையை விடுத்து, ஒத்துழையாத பல பகுதியினரும் ஒருங்கு கூடி இறைவன் திருவருளை முன்னிட்டு, சைவத் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை முழு உரிமைத் தலைவராகத் (Dictator) தேர்க்

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

| மலர் ௭ | பவ ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1934ஸ்ரீ அக்டோபர்மீ | இதழ் ௧௦ |
| --- | --- | --- |

## சமாஜ விசேஷ மகாநாடு

[காரியதரிசி]

நமது சமாஜத்தின் இருபத்தொன்பதாம் ஆண்டு விசேஷ மகாநாடு ஒன்று திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் ம  பத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான ´.வசாரிய சுவாமிகள் தலைமையில் சென்னை திருமயிலாப்பூர் சங்கீத சபை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நிகழும் பவஸ்ரீ புரட்டாசிமீ ௫௳ (21-9-1934) வெள்ளிக்கிழமை முதல் மூன்றுநாட்கள் இனிது நிறைவேறிய நற்செய்தியை மிக மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

முதல்நாள் மாலை 5½ மணிக்கு தலைவரவர்களைச் சமாஜத்தினர் மேளவாத்தியம், குடை கொடிச்சீலை முதலிய கோயில் திருச்சின்னங்களாகிய பலவகை மரியாதைகளோடு கபாலீசுவரர் கிழக்கு சந்நிதியிலுள்ள மண்டபத்திலிருந்து மகாநாட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பிறகு அன்பர்கள் அனைவரும் பேரவைக்கண் அமர்ந்தவுடன் தமிழ்மறை

ஓதப்பெற்று கடவுள் வணக்கம் நிகழ்ந்தது. பிறகு சமாஜத் தலைவர் சைவத் திருவாளர் - வேங்கடசாமி நாட்டாரவர்கள் சுவாமிகள் தமிழ்நாட்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் தமது மன மொழி மெய்களால் ஒல்லும்வகை உழைத்து வரும் பெற்றியினை விளக்கி அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்துள்ள போழ்தில் சமாஜத்தினர் வேண்டுகோளுக் கிரங்கி இம்மகாநாட்டின் தலைமை தாங்க ஒப்புக்கொண்ட அன்பினையும் வற்புறுத்தி சுவாமிகள் மகாநாட்டுத் தலைவராகும்படி பிரேரித்தார்கள். இதனை அவையினர் ஏக மனதுடன் ஒப்புக்கொண்டனர். பிறகு சுவாமிகள் தலைமைத் தானத்தில் அமர்ந்தார்கள். பிறகு நமது சமாஜப் போஷகருள் ஒருவராகிய சைவத் திருவாளர் புழலை - திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தாம் அன்புகூர்ந்து இயற்றிய சமாஜ நல்வரவேற்புக் கவியைப் பாடினார்கள். (இதனை மற்றோரிடத்திற் காண்க.) பிறகு ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம்வரையில் பல உபநிடத வாக்கியங்களையும், திருக்குறள், திருவாசகம் முதலிய பல திருவாக்குக்களையும் ஆதாரமாகக் கொண்டு சிவம், சைவம், சித்தாந்தம் என்ற சொற்களின் பொருள்களை இனிது விளக்கி, சிந்தைக்கினிய செவிக்கினிய வந்த இருவினைக்கினிய மாமருந்தே போன்ற தமது தலைமைப் பேருரையை சுவாமிகள் நிகழ்த்தினார்கள்.

பிறகு திரு. குப்புச்சாமிமுதலியாரவர்கள், 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்' என்பதுபற்றி தமது நிரம்பிய ஆராய்ச்சியுடன் நகைச்சுவை பொருந்த இனியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பிறகு தலைவரவர்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள பல பாக்களை விவரித்து, அவற்றிலுள்ள கருத்துக்கள் உபநிடதங்களில் வந்துள்ள இடங்களை விளக்கி, தேவர் குறளும் திருநான் மறை முடிவும் ஒன்றே என்பதை அனைவரும் [illegible] தெளிவாக எடுத்துக் கூறித் தமது கருத்துரையைத் தெரிவித்தார்கள். பிறகு கடவுள் வாழ்த்தோடு முதல் நாள் நிகழ்ச்சிகள் முற்றுப் பெற்றன.



அடுத்த நாள் பிற்பகல் $2\frac{1}{2}$ மணிக்கு மீண்டும் பேரவை கூடுவதாயிற்று. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் முடிந்தவுடன் திருவாளர்கள் இராஜேசுவரியம்மாள், அனவரத விநாயகம் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சுவாமிநாத சாஸ்திரிகள், சுரேந்திரநாத ஆர்யா, சச்சிதாநந்தம்பிள்ளை, ஆகிய பேரறிஞர்கள் முறையே புகலிவேந்தன் புனிதமொழி*, ஒழிவிலொடுக்கம்*, சங்க காலமும் சமயமும், அற்புதத் திருவந்தாதி, பெரிய புராணத்தில் சில அணிகள், The Message of Saivism (ஆங்கிலத்தில்) சிறுத்தொண்டர் என்னும் செம்பொருள்கள் பற்றி மிகத் தெளிவாகவும் செம்மையாகவும் [illegible] கருத்தில் வேறூன்றிச் செல்லும் முறையில் அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவரவர்கள் ஆரியத்திலும் தமிழிலும் பல மேற்கோள்களை எடுத்து விளக்கித் தமது கருத்துரையை மிக விரிவாக நிகழ்த்தினார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு ஒன்பதரை மணிக்குக் கூட்டம் கலைந்தது.

மூன்றாம் நாள் பிற்பகல் $2\frac{1}{2}$ மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் முடிந்தவுடன் திருவாளர்கள் சுவாமிநாத சிவாசாரியார், சமரபுரி முதலியார், சிதம்பரநாத முதலியார், கலியாணசுந்தர முதலியார் ஆகிய பேரறிஞர்கள் முறையே சிவதத்துவம், திருமுருகாற்றுப்படை, சமயநெறி, திருஞான சம்பந்தரும் சமணரும் என்னும் அரிய பொருள்கள் பற்றி நிரம்பிய

---

*இவ்விரு சொற்பொழிவுகளின் சுருக்கத்தை மற்றோரிடத்திற் காண்க.

ஆராய்ச்சியுடன் கற்றோரும் மற்றோரும் இன்புறும் இனிய முறையில் செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு திரு. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், சைவ மக்கள் நாடோறும் தவிராது செய்தற்குரிய பணிகள் சிலவற்றை விளக்கி சிவதீக்கை செய்து உபகரிக்குமாறு சுவாமிகளை வேண்டினார்கள். பிறகு தலைவரவர்கட்கும், சொற்பொழி வாளர்கட்கும், தமிழ்மறை யோதிய திரு. சிங்காரவேல் முதலியாருக்கும், இடம் உதவிய சங்கீத சபையினருக்கும் வன்னியசங்கம் பாடசாலை அதிகாரிகட்கும், பலவகையிலும் தொண்டு புரிந்து மகாநாட்டைச் சிறப்பித்த ஏனைய பல அன்பர்கட்கும் காரியதரிசி வந்தனம் கூறினர். பிறகு தலைவரவர்கள் தமது முடிபுரையை மிகவிரிவாகவும் தெளிவாகவும் எளிய நடையில் அனைவரும் உணரும் வகையில் கூறினார்கள். பின்னர் அரநாம முழக்கத்துடன் மகாநாடு இனிது நிறைவெய்தியது.

அடுத்தநாள் மாலை சுவாமிகள் திருமயிலைக் கபாலீச்சரத்தில் தரிசனம் செய்தார்கள். ஆலய அதிகாரிகள் சுவாமிகளை விருதுகள் முதலிய சகல மரியாதைகளுடன் அன்போடு வரவேற்று தரிசனம் செய்வித்தது பெரிதும் போற்றத்தக்கது. தரிசனம் முடிந்தவுடன் சுவாமிகள் வேதபாதமண்டபத்தமர்ந்து "ஈரமிலா அங்கம் உயிர் எய்தவுற்றல்" என்பது பற்றி கடன்மடைதிறந்தாலன்ன சொற்பெருக்காற்றினார்கள். கபாலீச்சரத்தில் ஒரு தேவார பாடசாலை இருத்தல் வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள்.

அடுத்தநாள் மாலை திருவள்ளுவர் ஆலயத்தில் சுவாமிகள் தரிசனம் செய்து முடித்தவுடன் ஆங்கிருந்து விருதுகளுடன் வெள்ளீசுவரர் ஆலய அதிகாரிகளால் வரவேற்கப்பட்டார்கள். நான்கு மாடவீதிகளிலும், தென்கூர் செல்வ விநாயகர் தெரு, ஆடம்தெரு முதலிய தெருக்களிலும் ஊர்வலமாக அழைக்கப்பட்டு, பற்பல வீடுகளில் பூர்ணகும்பம், மங்களாரத்தி முதலிய உபசாரங்கள் செய்யப்பெற்று இறுதியில் வெள்ளீசுவரர் ஆலயத்தில் தரிசனம்செய்து முடித்தார்கள். இறுதியில் சண்முகப்பிராபாவம் என்பது பற்றிய சொற்பொழிவு நடந்தது. சுவாமிகள் திருமயிலாப்பூரில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மயிலைவாசிகட்குப் புத்துயிர் அளித்துள்ளன.



# நல்வரவேற்புக் கவி

## ஆசிரியவிருத்தம்

திருவளர்பூம் பொழிலுடுத்த விருகரையும்
புரண்டோடுஞ் சீர்சான் மிக்க
பெருமிதங்கொள் வயப்பெருக்கா லுலகூட்டு
மணிவயல்சூழ் பெருமை சான்ற
மருவளர்தண் பெண்ணைநதித் தீரமமர்ந்
தயரியபல் வளமிக் கார்ந்த
அருமைதவழ் நடுநாட்டின் மிகச்சிறந்த
பெருமைதனை யறிந்தெவர்தா மறைவ ரின்றே.

மன்னுயுக மூவிருவ ரருள்நிறைந்த
வடியார்கள் வதிவ தாலும்
பன்னரிய பொருள்நிறைந்த தேவார
முதலியவை பகர்த லாலும்
உன்னரிய சிவயோக சிவபோகப்
பெரியார்கள் உறைத லாலும்
தன்னிகரில் திருப்பாதி ரிப்புலியூர்
மிகச்சிறந்து தழைக்கு மாதோ. (௨)

வஞ்சமணர் கற்றூணிற் கட்டியமிழ்த்
திணுங்கடலில் வாகீ சர்க்கு
நஞ்சணிதற் பரன்றேன்றுத் துணையீச
ரக்கல்லே நாவா யாக்க
அஞ்சவவர் முன்னர்கரை யேறியவந்
நாவரச ரடியைப் பேணும்
மஞ்சுதவழ் மணிமாட நிறைவீதி
யலங்கார மல்கு மென்றும். (௩)

செருக்கறுக்க வருமடியார் மலமகற்றி
யருள்புரியுந் திகழ்மெய்ஞ் ஞானப்
பெருக்கமுற வாட்கொடிருக் கோவலூ
ராதீனப் பெட்புட் கொண்ட
இருக்கைவளர் ஞானியார் மடாலயத்திற்
கதிபதியா யிறும்பூ தெய்தும்
குருக்கள்சிவ சண்முகமெய்ஞ் ஞானசிவா
சாரியரெங் கோமான் வாரீர். (௪)

பனியசல வுமைதருநற் குமரனிரு
சரணமலர் பணிந்தி றைஞ்சி
இனியதமிழ் மணங்கமழுஞ் செவிக்கினிய
சொற்பொழிவை யெளிதி னூட்டி
கனியமன முருகநித நிகழ்த்திவருந்
தேசிகநின் கவின்சேர் வாசத்
தொனியழகைக் கேட்டுமகிழ் விக்குமகோ
பந்யாசந் துய்க்க வாரீர். (௫)

மங்களமார் சுத்தாத்து விதசைவ
சித்தாந்த மகாச மாசச்
சங்கமமர் விசேடநிறை விழாவிற்குத்
தகைமைபெறுந் தலைமை பெற்றும்



எங்களையா தரிக்கமன மகிழ்வொடுவந்
துளங்குளிர வியம்ப வாரீர்
மங்கலிலாச் சிவவேடந் தாங்குபுநற்
பொலிவுடைய மகிபா! வாரீர். (௬)

வாழ்த்து வெண்பா

வாழ்க சிவசமய மாமறுநீ றக்கமணி
வாழ்க திருத்தொண்டர் மன்னுதமிழ்—வாழ்கநிதம்
நற்சிவ சண்முகமெய்ஞ் ஞானசிவா சாரியர்கள்
சொற்பா திரிப்புலியூர் சூழ்ந்து.

---

ஷை சமாஜப் போஷகரி லொருவராகிய பண்டிதரத்தினம்-தூகஸ்ரீ புழலை. திருநாவுக்கரசு முதலியார் (*Mirasdar & Honorary Magistrate, Sembiam.*) இயற்றியது.

# ஐ ய வி ஞ

[கோவைக்கிழார்]

பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடல் புராணத்தில் சமணர் கழுவேற்றிய படலத்தில் திருவேடகம் உண்டான வரலாறு அடியிற்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது. சமய மேம்பாட்டை நிரூபிக்க சமணரும் திருஞானசம்பந்தரும் வைகையாற்றில் ஏடுகளை இட்டனர். சமணருடைய ஏடுகள் வெள்ளத்தில் கீழே போயின. சம்பந்தருடைய ஏடு நீரை எதிர்த்து மேலே சென்றது. சமணர் தோல்வியுற்று சபதப்படி கழுவில் ஏற்றப்பட்டனர். பாண்டியன் சம்பந்தரை நோக்கி எதிரே சென்ற ஏடு எங்குற்றது என்று வினவினுன். அதைக் கொணர சம்பந்தரும் ஆற்றின் கரையிலே மேற்கே சென்றனர். சிறிது தூரம் செல்லவே ஏடு மறைந்தது. அங்கிருந்த இடைச் சிறுவர்களைக் கேட்டதற்குத் தமக்குத் தெரி

யாது என்றனர். பிள்ளையார் பெருமானைப் பதிகம் பாடினர். ஈசனார் அங்கே ஒரு வில்வக் காட்டினுள் சுயம்புவாகத் தம் உருவம் காட்டினர். பாண்டியனும் அச்செய்தி கேட்டு விரைந்து வந்தனன். உடனே ஈசனார் ஒரு முதிய அந்தணனாகத் தோன்றிச் சம்பந்தரை விளித்து திருநீறுவழங்கினர். பிள்ளையாரும் ஏடு கேட்க அதனைத் தந்து மறைந்தருளினார். அதனைப் பாண்டியனுக்குக் காட்டப் பாண்டியனும் பிள்ளையாரை வணங்கி அங்குத்தோன்றிய சுயம்புமூர்த்திக்குத்திருக்கோயில் எழுப்பி ஊரும் கட்டினான். அதுமுதல் அவ்வூருக்குத் திருவேடகம் எனப் பெயர் ஏற்பட்டது.

"அற்றைநா ளாதி யாக வேடக மென்று நாமம்
பெற்றதால்"

என்றார் பரஞ்சோதியார். (செ - 74) இதே காரணந்தான் வேம்பத்தூராரும் கூறுகின்றனர். (செய் - 65, 66 கழுவேற்றின படலம்)

ஆனால் சேக்கிழாரோ இவ்வரலாற்றை வேறுவிதமாகக் கூறுகின்றார். சம்பந்தப்பெருமான் இட்ட ஏடு நீரை எதிர்த்துச் சென்றது; குலச்சிறையார் ஒரு விரைவாய் ஓடும் குதிரைமேல் ஏறிப் பின்தொடர்ந்தார்; சம்பந்தர் அவ்வேடு தங்கும்படி ஈசனாரை "வன்னி" என்ற பதிகம் பாடினார்; உடனே குலச்சிறையார் நீர் நடுவுள் புக்கு ஏட்டை எடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொண்டு வந்து சம்பந்தப்பெருமானுக்குக் காட்டினார்; மன்னவன் மந்திரியை அழைத்து சமணரை முறைப்படி தண்டிக்கச் சொன்னான். இவ்வரலாற்றிற்கும் பரஞ்சோதியார் கூறும் வரலாற்றிற்கும் உள்ள வேற்றுமைகளை மிகத் தெளிவாய் அறியலாம். சேக்கிழார் வரலாற்றில் ஏடகம் என்ற பெயர் ஏற்பட்டதன் காரணம் ஏடு தங்கினதினால் என்று கூறப்படவில்லை.



"ஏற்றுயர் கொடியினானைப் பாடினார் ஏடு தங்க" (சே - 849)

என்றும்,

"ஏடகம் பிள்ளை யார்தாம் வன்னிஎன் றெடுத்துப் பாடக்
கூடிய நீரில் ஏடு குலச்சிறை யாரும் கூடி
காடிட மாக ஆடும் கண்ணுதல் கோயில் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு நின்றஏ டெடுத்துக் கொண்டார்"
(சே - 850)

என்று மாத்திரம் கூறுகின்றார் சேக்கிழார்.

ஆனால், சம்பந்தப் பெருமான் ஏடு தங்கப்பாடிய திருவேடகப் பதிகத்தில் அடியிற்கண்ட பாசுரங்கள் இருக்கின்றன.

"வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே"

"புதுமலர் கொண்டு மறையவர் வழிபடும்படியானவரும் அடியார்கள் இன்னிசைப் பாடலால் துதிக்கப்படுபவருமான ஏடகத்தில் எழுந்தருளும் ஒருவன்" என்பது பொருளாகும். ஆகவே ஏடகம் என்ற பெயர் கொண்ட தலம் சம்பந்தர் அங்கு செல்வதற்கு முந்தியே இருந்திருக்கவேண்டும்.

"கோடுசந் தனமகில் கொண்டிழி வையைநீர்
ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே"—11.

இதனால் 'ஏடகத் தொருவனை ஏடுசென் றணைந்தது' என்கிறார். ஆகவே, ஏடகக்கோயில் முந்தியே இருத்தல் வேண்டும். ஏடு சென்றதினால் "ஏடு + அகம்" என்றாகி ஏடகம் ஆகி இருக்குமானால் ஞானசம்பந்தர் பாடினதற்கு முந்தி அப்பெயர் ஏற்பட நியாயம் இல்லை. ஆகவே, அப்பெயரும் அப்பெயர் கொண்ட கோயிலும் ஞானசம்பந்தர் ஏடுவிட்டதற்கு முந்தியே இருத்தல் வேண்டும் எனப் புலப்படும்.

இவ்விரு கொள்கைகளில் எது சரியானது? ஏடகம் எப்போது ஏற்பட்டது என்பவைதான் ஐயங்கள்.

# ஒழிவிலொடுக்கம்*

[எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி.]

**ப**ண்டைக்காலந்தொட்டு நமது இந்தியா தேசத்துக்குச் சிறப்பாகவுள்ளது தத்துவ ஆராய்ச்சியே. 'இந்தியா தேசத்தார் தத்துவ சாஸ்திரிகள் சமூகம்' என்று புகழ்ந்துரைத்தாருமுண்டு. தத்துவமென்பது உண்மை. பொய்யே நிறைந்த உலகத்தில் மெய்யைக் காண்பதற்காகவே இந்தியா தேசத்தார் பாடுபட்டனர். உண்மையை எல்லாரும் ஒரேவிதமாகக் கண்டாரல்லர். அதனாலேயே பலவகை மதங்கள் ஏற்பட்டன.

தமிழ்நாட்டில் உண்மையாராய்ச்சி புரிபவர் வேதாந்திகளென்றும் சித்தாந்திகளென்றும் இருவகைப்படுவர். வேதாந்தமாகிய உபநிடதங்களிற் காணும் கொள்கைகளைத் தமவாக் கொள்பவர் வேதாந்திகள். வேதாந்தங் கூறுவது அத்வைதமென்று கொண்டு கேவலாத்வைதம் விசிஷ்டாத்வைதம் சுத்தாத்வைதமெனு மூன்றுக்கும் அதனை யாதாரமாகக் கொள்வர். துவைதத்துக்கும் வேதாந்தம் இடங்கொடுக்குமென்பாரும் உண்டு. இஃதிவ்வாறாயினும் தமிழ்நாட்டில் வேதாந்தமென்னின் சங்கராத்வைதமே குறிக்கப்படும். கைவல்ய நவநீதம், ஞானவாசிட்டம் முதலிய நூல்கள் அதனை விரித்துரைப்பன.

சித்தாந்திகள் வேதங்களோடு சிவாகமங்களையும் தமக்கு ஆதாரமாகக் கொள்வர். சித்தாந்தம் ஆகமாந்தமெனவும் படும். சிவாகமங்கள் சைவமென்றும் சொல்லப்படுதலால் சித்தாந்தத்தைச் சைவசித்தாந்தமென்று சாதாரணமாகச் சொல்லுவதுண்டு. சித்தாந்தமென்னுஞ் சொற்குப் பொருள்

*இது திரு. பிள்ளையவர்கள் நமது சமாஜவிசேஷ மகாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு.



முடிந்த முடிவு. அதனால் சைவசித்தாந்தமென்பதே பொருத்தமான பெயராகும். சைவசித்தாந்தத்தை யுரைக்கும் நூல்கள் சிவஞானபோதம் முதலிய பதினான்கெனச் சொல்வர். சிவஞானபோதம் மெய்கண்ட தேவராற் செய்யப்பட்டதாகலின் அவற்றை மெய்கண்ட சாத்திரங்களென்றும் சொல்வர். அவற்றுள், சிவஞானபோதம் முதனூல், சிவஞான சித்தியார் வழிநூல், சிவப்பிரகாசம் சார்புநூல். மற்றையவை இவற்றிற் கூறப்படும் உண்மைகளுள் ஒரோவொன்றையெடுத்துத் தெளிவுபடுத்துவன. சிவஞானசித்தியார் பரபக்ஷமும், சங்கற்பநிராகரணமும் புறச்சமய அகச்சமயங்களைக் கண்டிப்பன. திருவுந்தியாரும் அதன் வழித்தாகிய திருக்களிற்றுப்படியாரும் அனுபூதியைப் பெரிதும் பாராட்டியுரைக்கும் அரிய சாத்திரங்களாம். அவை சிவஞானபோதத்திற்கு முன் தோன்றியவையெனக் கொண்டு அவற்றை ஆதியில் வைப்பர்.

> உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
> பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> வுண்மைநெறி சங்கற்ப முற்று.

என்பது மெய்கண்ட நூல்களின் பெயர்களைக் குறிக்கும் வெண்பா. மெய்கண்ட சாத்திரங்களை மூலபாடமாகவும் உரைபாடமாகவும் வெளியிட்டவர்கள் இம் முறையையே கொண்டனர். உமாபதிசிவம் இயற்றிய நூல்கள் சிவப்பிரகாசாதி எட்டு என்னும் கொள்கையே பரவியுள்ளது. 'சிவப்பிரகாசாதி யஷ்டக'மென்றோர் பதிப்பு அவற்றுள் இவற்றைமாத்திரம் கொண்டு வெளிவந்ததுண்டு. ஆயினும், உண்மை நெறிவிளக்கம் அவர் செய்ததன்று, சீகாழிச் சிற்றம்பலநாடிகள் சீடர் சீகாழித் தத்துவநாதர் செய்தது. அதனை யொழித்துச் சீகாழிச் சிற்றம்பலநாடிகள் இயற்றிய துகளறு

போதத்தைச் சேர்த்துச் சாத்திரங்களைப் பதினான்கெனத் தொகைப்படுத்தற்கு ஆதாரங்கள் உண்டு. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், துகளறுபோதம் மூன்றையும் பதினான்கில் இறுதி மூன்றாக வைத்துச் சாத்திரங்களைக் கிரமஞ்செய்த சுவடிகள் காணக் கிடைக்கின்றன.

சிவஞானபோதத்திற்கு முன் சிவாகமச் சார்பாகத் தமிழிற் செய்யப்பட்ட நூல்கள் ஞானாமிர்தம் போன்றவை சில உள. ஞானாமிர்தத்தில் ஞானபாதமே அச்சிடப்பட்டுளது. சரியாபாதம் கிரியாபாதம் யோகபாதம் மூன்றும் அகப்பட்டில. கிரியாபாதத்துள்ள செய்யுளொன்று சிவஞானபாடியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

சாஸ்திரங்களின் நோக்கமென்ன? சாஸ்திர ஆராய்ச்சி செய்வது எதன்பொருட்டு? சாஸ்திரங்கள் பக்குவிகளுக்கு உண்மையையுணர்த்துவதற்காக ஏற்பட்டன. சாஸ்திர ஆராய்ச்சி செய்வது மெய்யுணர்ந்து பற்றற்று முத்தியடைதற்பொருட்டு. இதன்பொருட்டுச் சாஸ்திர ஆராய்ச்சி செய்வோர் எத்தனை பேர் உளர்? சைவசித்தாந்த சாஸ்திரங்களை எடுத்துக்கொண்டு நோக்குவோமாயின், அவற்றின் ஆராய்ச்சி எவ்வாறு நடைபெறுகிறது, எதன் பொருட்டு நடைபெறுகிறது? சிறிதுநாள் முன்வரை, அச் சாஸ்திரங்கள் அச்சுக்கு வாராதிருந்தபொழுது, திருவாவடுதுறை முதலிய மடங்களிலுள்ளாரும் மடங்கட்குப் புறத்தே தமிழ்ப்புலமை நிரம்பியாரும் உரிய தீக்ஷைகளைப்பெற்று, கல்வியறிவு ஒழுக்கங்களான் நிரம்பிய குரவரிடத்து அவற்றை யோதிப் பொருள் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து சீவன்முத்தரா யிருந்து வந்தனர். இதற்கு மாறாகச் சில இடங்களில் சில காலங்களில் வாதங்கள் நிகழ்த்துவதற்கு அவை கருவியா யிருந்ததுமுண்டு. தற்காலத்திலோ முறை மாறி வாதங்கள் நிகழ்த்துவதற்கே



அவை கருவியாயின. இச் சாஸ்திரங்களை ஆராய்பவர் இதர சமயங்களை யாராயாமலே அவற்றைக் கண்டிக்கத் தெரிந்துகொண்டனர். சாஸ்திரங்கள் எழுதிய காலத்தில் வழங்கிய சமயங்கள் இக்காலத்து வழக்கொழிந்தனவாயினும் அவற்றை யாராய்வது தருக்கநூற் பயிற்சி தருமென்று கொண்டு அதில் திளைக்கின்றனர். ஆகவே சாஸ்திரங்கள் செய்தாரின் நோக்கம் அடியோடு மறக்கப்பட்டொழிந்தது.

சிவஞானபோதம் முதலிய சாஸ்திரங்கள் சிவாகமங்களின் ஞானபாதத்தையே முன் மாதிரியாகக் கொண்டு பதி பசு பாச விலக்கண முணர்த்துங்கால் ஐயந்திரிபற வுணர்த்துதல்வேண்டிச் சைவசித்தாந்த மொழிந்த பிறமதக் கொள்கைகளைப் பூர்வபக்ஷஞ்செய்து அதனுடைய உயர்வை ஆங்காங்கே புலப்படுத்தின. மூலங்களிற் குறிப்பாக வுள்ளனவற்றை உரைகள் தெளிவாக விளக்கிப் போந்தன. எனினும் சாஸ்திரங்களின் நோக்கம் பிற மதங்களைப் பூர்வபக்ஷஞ் செய்தலன்று. ஓரூரை நாடிச் செல்பவன் வழியிற் கண்ட காட்சிகளால் தன் நாட்டம் மறந்து அவற்றைக் கண்டு மகிழ்ந்து காலம் போக்கல்போ லாகும் சாஸ்திரங்களில் சாரத்தைக் கைக்கொள்ளாது சாரமல்லாதவற்றில் மனத்தைச் செலுத்துகை.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் போன்ற நூல்கள் கற்போரது மனத்தை உண்மைப் பொருளில் மாத்திரமே செலுத்தும். திருவுந்தியார்க்கு விளக்கவுரை போன்றது திருக்களிற்றுப்படியார். துகளறுபோதம் சிவோபாசனையால் அடையப்பெறும் அநுபூதித் திறங்களை வகுத்துரைப்பது. இவற்றோடு துணைபோவதாயும் இவற்றிலுள்ள பொருள்களை உவமைகளால் தெளிவுபடுத்தி விரித்துரைப்பதாயுமுள்ள நூல் ஒழிவிலொடுக்கம்.

பல விஷயங்களைக் கலந்து கூறும் மற்றச் சாஸ்திரங்கள் போலன்றிச் சுகாதீத நிலையை விரைவி லடைவிக்கும் தற்போத வொழிவைப் பற்றியே யுரைக்கும் இந் நூல் பெரு வழக்காயில்லாமை வருந்தத் தக்கது. சைவசித்தாந்திகளெனத் தம்மைச் சொல்லிக்கொண்டு திருப்தியடைவோரிற் சிலர் இது ஐக்கியவாத முரைக்கும் நூல் என்றுரைத்து இதனை ஒதுக்குவதை நான் அறிவேன். ஐக்கிய வாதத்திற் குரைக்கப்படும் இலக்கணங்கள் இந்நூலகத் தில்லாமையை ஆராய்ச்சியாளர் அறிவர். தற்போத மழிவதால் தம் உலக வாழ்விற்குக் கேடுவருமென் றஞ்சி இந் நூலை யோதி யுணர் தலையொழிந்தனர் என்னின் அது பொருந்துவதாகும். ஒழிவிலோடுக்கத்தைச் சிரத்தையோடு ஓதியுணர்பவர் உலக வாழ்வில் அசிரத்தை கொள்ளுதல் திண்ணம். அசிரத்தை வெறுப்பினால் வருவதன்று; தற்போத மொழிந்து சிவானந்தப் பேற்றை யடையும் நெறியில் நிற்பவர்க்கு அவ்வசிரத்தை தானே யுண்டாகும். சாந்தலிங்க தேவர் வைராக்கியசதகத்தை அரங்கேற்றிய காலத்து அதனைக் கேட்ட பிரபுக்கள் பலர் அப்பொழுதே துறவடைந்தன ரென்னும் வரலாறு உண்டன்றோ.

இனி, இவ்வரிய சாத்திரம் இயற்றிய ஆசிரியர் யாவர், அவர் திகழ்ந்த காலம் எது முதலிய கேள்விகள் பல எழுதல் இயல்பே; இந் நூலைக் கி. பி. 1851-ல் முதலாக அச்சிடுவித்துத் தமிழுலகிற் பரவச் செய்தவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள். அவர் இதற்குச் சிறப்புப் பாயிரமாகிய ‘ வள்ளல் குருராயன் ’ என்னும் வெண்பாவிற்கு ஓர் விரிந்த விருத்தியுரை யியற்றி நூலோடு சேர்த்ததன்றியும் அரும்பதங்களையும் அருந்தொடர்களையும் ஆங்காங்கே விளக்கினர். பின் இந் நூல் இரண்டு மூன்று முறை பதிப்பிக்கப் பட்டது. கி. பி. 1906-ல் இடையில் விட்டுப்போன சிறப்புப் பாயிர விருத்தியைச் சேர்த்ததோடு உரையில் பந்திகளைப் பிரித்து வேண்டாத சந்திகளை விடுத்து ஒரு பதிப்பு என்னால் வெளியிடப்பட்டது. அதன் பின் தோன்றிய பிறர் பதிப்புக்கள் என்னுடைய முகவுரையை மாத்திர மொழித்து மற்றையவற்றை அதிலுள்ளபடியே வெளியிட்டன. இராசாங்கத்தார் கையெழுத்து நூல் நிலயத்தில் இரண்டு ஏட்டுச் சுவடிகள் உள்ளன. அவற்றிற்கும் அச்சுப்பிரதிகட்கும் சில பேதமுண்டு. அவற்றின் துணைகொண்டும் பிற விடங்களில் அகப்படும் சுவடிகளின் துணைகொண்டும் அந் நூல் நன்றாக ஆராய்ச்சி செய்து நவீன முறையிற் பதிப்பித்தற் குரியது.



திருவருட்பிரகாசவள்ளலார்க்கு முன் இந்நூலைத் தமிழுலகிற் பரவச்செய்தவர் பேரைச் சாந்தலிங்கதேவர் என்னும் வீரசைவப் பெரியார். குமாரதேவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளைத் தம் குரவராகிய சாந்தலிங்கதேவரிடத்துக் கொண்டு சென்று அவரை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிய பொழுது சுவாமிகளது தமிழ்ப்புலமையை அறிந்த சாந்தலிங்கதேவர் ஒழிவிலொடுக்கத்தையும், தாம் இயற்றிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் என்னும் நூல்களையும் அவர் கையிற் கொடுத்து அவற்றிற்கு உரையெழுதுமாறு ஆஞ்ஞாபித்தார். ஞானசாஸ்திரங்களுக்கு உரையெழுதுவதில் சிதம்பரசுவாமிகள் சிறந்தவர் என்பதனை அவர் உரைகளை மேனோக்காக வோதியவர்களும் உணர்வர். அவர் உரையின்றி ஒழிவிலொடுக்கத்தின் பொருள் தெளிவாக விளங்காதென்பது மூலத்தைமட்டுமோதி நோக்கியோரால் எளிதினறிந்து கொள்ளப்படும். அந் நூலி லுள்ள உவமை நயங்களையும்! சாஸ்திர நுட்பங்களையும் சிதம்பர சுவாமிகள் நன்கு விளக்கியுள்ளார்.

இனி, இந் நூலைத் தமிழுலகிற் குபகரித்த பெரியார் சீகாழிக் கண்ணுடைய வள்ளலார். அவர் திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த பதியிலே அவதரித்து, ஞானக்கண்ணுடைமையாலும் அருட்கண்ணுடைமையாலும் கண்ணுடையார் என்னும் பெயர்க்கும், ஞானத்தின் மிக்க கொடையில்லையாகலின் அதனை வரைவின்றி வழங்கியதனால் வள்ளல் என்னும் பெயர்க்கும், உரியரானார். அவர் வரலாற்றைச் சீகாழி வித்துவச்சிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் செந்தமிழ்ச்செல்வியில் விரிவாக எழுதியுள்ளார்கள். 'அதிகைக்கதிபர்கள் மரபினருள் சண்பையர் தலைவனென்பாரும் மங்கையர்க்கரசி யென்பாரும் செய்த தவப்பயனால் கண்ணுடைய வள்ளலார் இரௌத்திரிஆ பங்குனிமீ திருவாதிரைத் திருநாளில் (1380-1) திருவவதாரஞ் செய்து 96 திருநட்சத்திரத்திலும் பூவுலகத்தை வைதிக சமயத்தால் அலங்கரித்து நளவருஷம் (1476) சித்திரைமீ சித்திரைத்திருநாளில் சோதியிற் பரிபூரணமடைந்தார்.'

கண்ணுடைய வள்ளலார் அருளிச்செய்த நூல்களுளொன்றாய மாயாப்ரலாபத்திற்குச் சிறப்புப்பாயிர முரைத்தவர்

> கெடிலப் புனல்சூ ழதிகைக் கதிபன்
> ஆழிமேன் மிதந்த காழிமூ தூரன்
> திசைமிகு கீர்த்திக் குகமடத் தலைவன்
> கருநெறி கழிக்குந் திருநெறித் தேசிகன்
> அத்தனைக் காட்டி யழுது வாழ்வித்த
> வித்தகன் றனக்கு வேளைக் காரன்
> சிற்குணன் றன்னைச் சேர்ந்தவர்க் கருளும்
> நற்கண் ணுடைத்திரு ஞானசம் பந்தன்
> திருமலி யின்பச் சிவனடித் தொண்டர்தம்
> பெருமைய ரடிபுனை பெற்றி யோனே

என உரைத்ததனால் வள்ளலார் சீகாழியினராகிய அதிகைக் கதிபராதலோடு குகமடத் தலைவரென்பதும், திருஞானசம்



பந்தப் பெருமானுக்கு அகம்படித் தொண்டரென்பதும், கண்ணுடைத் திருஞானசம்பந்தனென ஆண்டான் பெயரையும் சேர்த்து அவர் பெயரை வழங்குதலுண்டென்பதும் அறியக்கிடக்கும். குகமடம் அதிகையதிபர்களால் வைதிக சைவத்தை நிலைநாட்டற்பொருட்டு ஏற்படுத்தப்பட்டதென்றும், அது ஆதியில் குணதரவீச்சரத்திற்குக் கீழ்பாலிருந்ததென்றும், 1380-ல் அதிகைக்கதிபர்கள் அதனைச் சீகாழியில் ஆனந்த தீர்த்தத்தின் கீழ்பால் ஸ்தாபித்துக் கிரீடாசாரியர்களாலே சகல விமரிசைகளுடன் சத்காலக்ஷேபஞ் செய்துவந்தனரென்றும், வள்ளலார் இம் மண்டலத்தில் தமது காலத்தே 96 சைவமடங்களைத் தாபித்துத் தாம் அவைகட்குத் தலைவராகவும் ஏனை மடபதிகள் இதர தத்துவபதிகளாகவும் விளங்கச் செய்தார் என்றும் பிள்ளையவர்கள் உரைத்தனர். சோழமண்டல சதகத்திற் காணும்,

> பள்ள மலியார் கலியுலகிற் பரம னுருவாய்ப் பணிந்தோருக்
> குள்ள படியீ தெனவுணர்த்தி யுலவா முத்தி யுறக்காட்டிக்
> கள்ள மதவல் லிருள்கடிந்து காணுங் காழிக் கண்ணுடைய
> வள்ளல் கருணை செயுஞ்சூழல் வளஞ்சேர் சோழ மண்டலமே

என்னுஞ் செய்யுள் வள்ளலார் கண்ணுடையார் எனப்பட்டதற்குக் காரணத்தை யுரைத்து அவரவதாரத்தால் சோழநாடு உய்ந்ததைக் குறித்தது.

கி. பி. 1906-ல் வெளிவந்த என்னுடைய ஒழிவிலொடுக்கப் பதிப்பு முகவுரையில் கண்ணுடைய வள்ளலாரைப்பற்றி வழங்கும் ஐதிகங்கள் மூன்று உண்டு என உரைத்தேன். 1929-ல் வெளிவந்த அருட்பிரகாசம் என்னும் தமிழ்மாசிக பத்திரிகையின் இரண்டிதழ்களிற் காணப்படும் கண்ணுடைய வள்ளலார் வரலாற்றிலும் இம் மூன்றுமே காட்டப்பட்டுள்ளன. அவற்றையின்றி வேறு ஐதிகம் எங்கும் உரைக்கப்படவில்லையாகலின், அவற்றை யிங்கு யான் முன்னுரைத்தவாறே

யுரைப்பேன்.ஓர் ஐதிகம் இவரைச் சைவசித்தாந்த ஸ்தாபனாசாரியராகிய மெய்கண்டதேவர்க்குத் தநயராக்கும். அப் பெரியார்க்குப் பிள்ளையா யவதரித்த வள்ளலார் மேலான ஞான நெறியிலேயே மனம் பற்றினவராய்ச் சரியை கிரியை யோகமென்னும் மூன்று பாதங்களையும் பழித்து, நூலெங்கும் தற்போதவொடுக்கம் வேண்டற்பாலதென முழக்கி, அதனைத் தவிர வேறொன்றுங் கூறாததற்கு அறிகுறியாக (தற்போத) ஒழிவிலொடுக்கமெனத் தமது நூற்குப் பெயரு மிட்டருளி அதனைத் தந் தந்தையாரிடத்துக் கொண்டுபோய் அவர் பூஜை வேளையிற் காட்டினராம். மெய்கண்டதேவரோ பக்குவ வேறுபாடுகளுக்கேற்ப வழங்கிவரும் வழிபாட்டு வேறுபாடுகளையும் ஆதரித்துவந்தன ராதலின், அந் நூலைக் கண்டு மனமுளைந்து பூஜையிலிருந்தவாறே சிறுகோப வெளிப்பாட்டினால் தமது திருமேனியி லிட்டிருந்த விபூதி திரிபுண்டரக் குறிகளை யழித்துச் சைவசமயத்துக்கும் அச் சமயத்தின் சின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களுக்கும் கேடு வந்ததே என்று இரங்கினராம். வள்ளலாதீனத்து வந்தார் கைகளிற் குறிகளையிட்டு அழிக்கும் வழக்கத்தைச் சுட்டிக்காட்டி இக் கதை மெய்ம்மையேயென்று நிறுத்த முயலுவாரு முண்டு. விபூதியை யழித்தவர் மெய்கண்டதேவரா யிருந்ததனால் வள்ளலதீனத்தார் செய்கைக்கு அது காரணமாதல் எப்படி? மெய்கண்டதேவர் வள்ளலாதீனத்துக்கு மூலபுருஷரா? கண்ணுடைய வள்ளலார் காலம் பதினைந்தாம் நூற்றாண்டென்று ஏற்படுதலின் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த மெய்கண்ட தேவர்க்கும் அவர்க்கும் சம்பந்தங் கற்பித்தல் பொருந்தாது.

இனி, இவ்வாசிரியரைப் பற்றிச் சீகாழியில் வழங்கும் ஐதிகம் ஒன்று. அப் பதியில் ஒரு செல்வர் வீட்டில் செல்வப் பிள்ளையா யவதரித்து அக் காரணத்தினால் சகல கலைஞானங்



களிலும் அபாரவிற்பத்தி யடையும் அவகாச முதலியன பெற்றிருந்த நமது வள்ளலார் தினந்தவறாது திருக்கோயிலுக்குப் போவது வழக்கம். அப் பதியிலேயே அவதரித்துச் சிவபெருமானது செல்வக் குமாரரென விளங்கிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது அருட்சரிதங்களைக் கேட்டல் மாத்திரையேயன்றி அவற்றுட் பெரும் பான்மையும் நிகழ்ந்த ஸ்தலத்தில் தாமும் தங்கும் பெரும்பேறு பெற்றமையால், வள்ளலார் பிள்ளையாரிடத்துப் பேரன்பு பூண்டு அவரையே தமக்கு ஆசாரியராகக்கொண்டு உபாஸித்து வந்தார். உபாஸனையின் பலனாக ஞானம் தம் மனத்துள் உதித்த காலந் தொட்டு வள்ளலார் பிரதிதினமும் கோயிலுக்குப் போய்த் திரும்பித் துயின்றெழுந்து ஒரு வெண்பாச் செய்து வந்தார். கோயிலில் நெடுநேரம்போக்கி மீளுதல் இவர்க்கு இயல்பாகலின் இவர்க்கு வழிகாட்டியாகக் கந்தன் என்னும் வேலைக்காரன் தீவர்த்தியோடு உடன்செல்வது வழக்கமாயிருந்தது. இருநூற்றைம்பத்துமூன்றாம் வெண்பாவிற்குரிய தினத்தில் நெடுநேரமாயும் வள்ளலார் வீட்டிற்குத் திரும்பினாரல்லர். மத்தியில் மின்னலும் இடியும் மழையும் மிகுந்து தெருக்களிலெல்லாம் வெள்ளம் ஓடத் தலைப்பட்டது. கந்தன் வீட்டிலேயே தங்கிவிட்டான். வள்ளலார் தரிசனம் முடிந்து கோயில் வாயிலை யணுகிக் கந்தா என்னலும் ஸ்ரீசுப்பிரமணிய மூர்த்தியே கந்தனாய் உருக்கொண்டு அவ்விடத்துத் தீவர்த்தியுங் கையுமாப் புகுந்து வழிவிட்டார். வீடு போய்ச் சேர்ந்ததும் பழைய கந்தன் மன்னிப்புக் கேட்டற்காக ஒடுங்கி முன்வந்து நின்றான். கூட வந்த கந்தனைத் திரும்பிப் பார்த்தவர் அவனைக் காணாராய்த் திகைத்தார். பின்னர் இஃது எமது ஞானசம்பந்தன் அருள்விளையாட்டே யாகுமெனத் துணிந்து அன்றிரவு வெண்பாப்பாடி நூலை முடித்து அதனைத் தம் அருகிருந்த பக்குவர்களிடத்து மனமுவந்து கொடுத்தனர்.

காலையில் எழுந்ததும் தம்பெருந்திரவிய மத்தனையும் அரைக் கணத்தில் வாரியிறைத்துத் துறவு மேற்கொண்டார்.

இஃதன்றி வேறொரு ஐதிகமும் வழங்கும். சீகாழி நகரில் ஏழைக் குடும்பமொன்றிற் பிறந்து பள்ளிக்கூடத்தி லொதுங்கும் பாக்கியந்தானு மின்றிக் கூலித்தொழில் செய்து வந்தவர் கண்ணுடைய வள்ளல்; பகல் முழுதும் கூடையை யெடுத்துக் கூலிவேலைசெய்து அற்பப்பொரு ளீட்டித் தம் காலந் தள்ளிவந்தவர். ஒருநாள் தற்செயலாய் ஒரு பணக் காரன் இவரைக் கூலியாளாக வருமாறு கூப்பிட்டான். இவ ரும் இசைந்து உடன் சென்று அவன் வாங்கிய பொருள் களை யெல்லாம் தம் கூடையில் நிரப்பி வைத்துக் கூடை யைத் தூக்கிக்கொண்டு அவன்பின்னே சென்றார். அவனும் வழியிலிருந்த ஆலயத்துள் தரிசன நிமித்தம் பிரவேசித் தான். இவரும் உடன் செல்லுதல் அவசியந்தானே. ஒவ் வொரு சந்நிதியிலும் ஒரு முறை கர்ப்பூராத்திரிகம் பணி மாறப் பண்ணினவன் திருஞான சம்பந்தர் சந்நிதியில் எஞ் சிய கர்ப்பூரத்தை இரண்டாம் முறை ஏற்றிவைத்தான். உடனே கூலிக்கார வள்ளல் இம் மூர்த்தியே பெரிய சாமி யென்று நிச்சயித்தார். பின் அப் பணக்காரனோடு அவன் வீடு சேரும்வரை உடன் சென்று அவன் சரக்குகளை யொப்பித்து விட்டு அவன் கொடுத்த கூலியாகிய இரண்டு பணத்தையும் கூடைக்கு ளேற்று வாசற்படி தாண்டியதும் கூடையை இரண்டு பணத்தோடு வீதியிற் சுழற்றி யெறிந்தார். இவ ரைப் பார்த்திருந்த ஜனங்கள் இவன் பிழைக்க வகை யறி யான் பித்தேறினான் என்றனர். விரத்திமிக்க வள்ளல் நேரே கோவிலுட் புகுந்து பெரியசாமி சந்நிதியில் நின்றார். நின்ற வர் மூன்று நாள்வரை அவ்விடம் விட்டுப் பெயரவில்லை. இர விற் கோவிற் கதவு மூடுஞ் சமயம் எங்காயினும் ஒளித்தி ருந்து கோவிலார் புறம் போந்ததும் தங் கடவுளிடம் வந்து



சேருவர். மூன்றாம்நா ளிரவில் கடவுள் வள்ளலார்கனவிற் போந்து, 'உன்னுடைய பக்தியாற் பிரசன்னமாயினோம். வேண்டியதைக் கேட்டு அடைக' என்றனர். இவர் 'யான் ஒன்றும் அறியேன். எல்லாம் உன் பரம்' என்றனர். அதன் பின் ஞானசம்பந்தரே இவருக்குச் சகல ஞானத்தையும் உப தேசித்து இச் சாத்திரத்தை எழுதுமாறு செய்தனர். ஞான சம்பந்தரே இவருக்கு உபதேசகுரு என்பது பலபாட்டுக் களினும் ஆசிரியர் கூறுமாற்றான் அறியப்படும். உதாரண மாக,

கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவள வுக்களவு
சொன்னதல வெங்கள் சுவாமியுரை—மன்னடத்தி
லானந்த மூர்ச்சிதர்கை யாடகயாழ் தன்னிலே
தானுநலம் போலமொழிந் தான்.

என்னும் வெண்பாவை நோக்குக. வெண்பாக்கள் அமைந் திருக்கும் தன்மையும் பல வழக்குச் சொற்கள் விரவியிருத்த லும் ஆசிரியர் இலக்கண இலக்கியப் பயிற்சி வரன்முறையாக அடைந்தவ ரல்லர் போலுமென ஊகித்தற் கிடந்தரும். மற்று, வள்ளலார் அதிகைக் கதிபரெனப் படுதலால் செல்வ மல்கிய குலமொன்றி லுதித்தவராதல் வேண்டும். அவர் ஏழையாகக் கூலிவேலை செய்து பிழைத்தார் என்பது எவ் வாற்றானும் பொருந்தாது.

இனி, ஒழிவிலொடுக்கம் ஓதியுணர்ந்து அடங்குதற்குக் கருவியாயுள்ள நூல்.

சும்மா திருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை
விம்மா கதறுவதும் வேலைகளுந்—தம்மறிவா
னீட்டிப் பிடித்திருக்கு நிட்டைகளு ஞானிகண்முன்
காட்டும் பரியாச கம்.

இந்நூல் பொதுவி லுபதேசம், சத்திநிபாதத் துத்தம ரொழிவு, யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி,

விரத்தி விளக்கம், துறவு, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னும் பத்து அதிகாரங்கள் கொண்டது. பொதுவிலுபதேசம் ஆசாரியர் அனுசாரியரிலக்கண முதலியவற்றையும், நூலுட் கூறிய கருத்தெல்லாவற்றையும் தொகுத்துப் பொதுவான் உபதேசமாகக் கூறிற்று.

சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்றாற்
சித்தாந்த வேதாந்தச் சீர்மையிலை—முத்தி
யனிர்வசன மின்ப வதீதமெனி லாங்கே
பிணமிடுதல் கன்மம் பிளாய்.

என்ற வெண்பாவில் ஆசிரியர் சித்தாந்தம் வேதாந்தமென்று பேதம் பாராட்டுவதெல்லாம் கீழ்ப்பட்ட நிலையிற்றான் என்று விளக்கினார். சத்திநிபாதத் துத்தமனொழிவு நால்வகைச் சத்திநிபாதத்து உத்தமர்களது பிரபஞ்சப் பற்றொழிவை முறையே கூறிற்று. யோகக் கழற்றி கிரியைக் கழற்றி சரியைக் கழற்றி முதலிய மூன்றும் ஞானத்திற்குப் பக்குவராய் வந்தவர்கட்குத் தற்போதத்தை யொழித்து ஞானம் வருவித்தற் பொருட்டு அத் தற்போதத்தாற் செய்யும் சரியாதிகளைப் போதனைகளால் நீக்குமாற்றைக் கூறின. விரத்திவிளக்கம் உட்டுறவின் இலக்கணம் அறிவித்தது. துறவு புறத்துறவின் இலக்கணத்தை யுரைத்தது. அருளவத்தைத் தன்மை ஆறாறு தத்துவத்தைக் கடந்து ஆணவ இருளையும் கடந்து ஆன்ம தரிசனம் முதலிய சுத்தாவத்தையில் நிற்போரது தன்மை கூறிற்று. வாதனைமாண்டார் தன்மை குடும்பத்தோடு கூடியிருந்தும் ஞானம்பெற்று அக்குடும்ப வாதனை மாண்டு நின்றார் தன்மை யுரைத்தது. நிலையியல்பு உண்மைநிலை தவறினும் மீட்டும் அதனைச் சென்றடைதற் குபாயம் கூறியது.

ஒழிவிலொடுக்கத்தி னுள்ள உண்மைகளையும் நயங்களையும் இவ்வாறு அதிகார விளக்கங் கூறுதலானும், ஆங்காங்கே



சில வெண்பாக்களை யெடுத்துக் காட்டுதலானும் சொல்லி முடித்துவிட்டதாக நினைக்கலாகாது. வெண்பாத்தோறும் உண்மையுண்டு, பதந்தோறும் நயமுண்டு. அவற்றை முறையாக உரையின் துணைகொண்டே படித்தறியத்தகும்.

கண்ணுடைய வள்ளலார் அருளிச்செய்த நூல்கள் ஒழிவிலொடுக்கத்தையன்றி வேறு பல உள. மாயாப்ரலாபம் எண்பத்தொரு வெண்பாக்களா லாய நூல். இது நான்கு முறை பதிப்பிக்கப்பட்டுளது. நான்காம் முறை செந்தமிழ்ச் செல்வி வாயிலாகக் கி. பி. 1933-ல் வெளிவந்தது.

ஈரே ழுலகி லெண்ணிங் குயிர்க்கும்
பேரா வறிவாய்ப் பிரிவற நிறைந்து
காயா திகளாய்த் தனுவொடு கலந்து
மாயா ளென்னும் பேருடை மடந்தை
மறைக்கா லிருளை வெளியென மயக்கித்
தழைத்தபல் லுயிர்க்கிரு டாளுய் நிற்பவள்
அன்னை யிருண்மலி யாணவ மாகவும்
முன்னவள் திரோத மொய்குழ லாகவும்
நல்லுயி ரிச்சா ஞானங் கிரியை
தொல்லிரு வினைகளைத் தோழிய ராகவும்
சுத்த மாயையைக் கைத்தா யாகவும்
புத்திரர் பொறிபுலன் கரண மாகவும்
போதன் றன்னைப் புருட னாகவும்
தீதற வுடைய மோகினித் தெரிவை
ஈங்கிவ ளொருவன் றன்னு வின்புறு
பாங்குடைப் போதனைப் பறிகொடுத் தழிந்து
போதன் போதையைப் பொருந்துதல் கண்டு
போதமின் மாயாள் புலம்பல் தன்னைச்
சாயா வுண்மைத் தபோதனர் கேட்க
மாயாப்ர லாப மெனவகுத் துரைத்தோன்

கெடிலப் புனல்சூ ழதிகைக் கதிபன் . . .
பெருமைய ரடிபுனை பெற்றி யோனே.

என்னுஞ் சிறப்புப்பாயிரம் மாயையாம் மாது போதனை யிழந்து புலம்புதலே நூல் நுதலிய பொருளென விளக்கிற்று. காப்புச்செய்யுள் விநாயகப்பெருமான் வணக்கம்.

காயா திகள்கழியக் காதலித்த மாதவர்க்கு
மாயாப்ர லாப மெனவகுத்துத்—தூயபுகழ்ச்
சண்பையில்வாழ் சம்பந்தன் தாள்வணங்கிச் சாற்றுவே
னெண்பதுவெண் பாவாக யான்.

என்னும் குருவணக்கம் திருஞானசம்பந்தப் பெருமான் மேலது. நூலின் இறுதிச்செய்யுளுக்கு முந்திய செய்யுளும் அப் பெருமான் வள்ளன்மையை வியந்தது.

சொல்லுரிமைத் தூய்மையிலா நானுந் துணிபொருடான்
வல்லவர்கள் போனூல் வகுத்திடுதல்—அல்லலற
இப்பாரிற் றோன்று மிரவியெதிர் மின்மினிநின்
றொப்பாக மின்னுவபோ லும்.

என்னும் இந் நூல் அவையடக்கச் செய்யுளையும்,

வணங்கா வுரைக்கு வணக்கமிலை நீங்கை
வணங்கிவாழ்த் தென்னில் வளமியா—வணங்குகினும்
எல்லார்க்கு நன்று யிருப்பதிலை யாதொன்றும்
எல்லார்க்கும் பொல்லா திலை.

என்னும் ஒழிவிலொடுக்க அவையடக்கச் செய்யுளையும் ஒப்பு நோக்குக.

பஞ்சாக்கரமாலை காப்பு உள்பட அறுபது வெண்பாக்களா லாயது. தூலபஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம், சீவன் முத்தர் ஞானபூசைக்கிரமம் என்று மூன்று பிரிவினை யுடையது. இந் நூலில் காப்புச் செய்யுள் விநாயக வணக்கமாம்.

கல்லேன் பிறநூல்கள் காழியர்கோன் பாடலல்லாற்
சொல்லேன் சுரரைத் தொழுகிலேன்—நல்லசிறு



செஞ்சதங்கை கொஞ்சுதண்டைச் சிற்றடிக்கன் பாகவெழுத்
தஞ்சதங்கை யாமலக மாம்

என்பது குருதுதி. இதனை இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகர் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் பதிப்பாக 1932-ல் பழைய பொழிப்புரையுடன் வெளியிட்டனர்.

ஞானசாரம் நூற்றொன்பது விருத்தங்களா லானது. இதற்குக் காப்புச் செய்யுள் உண்டு; அம்பலத்தாடுவார்க்கும், ஞானநாயகிக்கும், திருஞான சம்பந்தர் முதலிய நால்வர் சமயகுரவர்க்கும், தொண்டரானவர்க்கும் வணக்கம் சொல்லப் பட்டுளது. இது இன்னும் அச்சாகவில்லை. இது நுதலிய பொருள்

மிக்கவே தாந்த சைவ மெய்ப்பொருட் பயனும் மூவர்
தொக்கசெந் தமிழ்சேர் வாய்மைச் சுருக்கமாய் வாத வூர
ருக்குநின் றோது முண்மைக் குரியதா லிந்த நூற்குத்
தக்கபே ருரைக்கின் ஞான சாரமாம் பெயர தாமே.

பொய்வகைச் சாறு வாகன் புகழ்சிவாத் துவிதி யீறு
யும்பொரு ளிதுவென் றெண்ணி யின்றள வுணர வொண்ணு
மெய்தரு பொருளா யின்ப வீட்டில்வே தாந்த மான
சைவவத் துவிதந் தன்னைத் தமிழினுற் சாற்ற லுற்றும்.

என்னும் பாயிரச் செய்யுள்களால் விளங்குகின்றது.

பஞ்சமலக் கழற்றி ஐந்து வெண்பாக்களா லாயது. திருஞானசம்பந்தரை முன்னிலைப்படுத்தி ஐந்து மலங்களும் கழலுமாற்றை யுரைப்பது.

நியதிப்பயன் நூற்றுமூன்று விருத்தங்களால் வடமொழியிலுள்ள குகபத்ததியின் சாரமாக ஆசிரியர் தமது கண்ணுடைய பரமாசாரிய மூர்த்தியாகிய திருஞானசம்பந்த வள்ளற் பெருமானை முன்னிலைப்படுத்திக் கி. பி. 1450-ல் இயற்றி யருளியது. இது காழி வித்துவச்சிகாமணி ப. அ. முத்துத்

18/100

தாண்டவராய பிள்ளை யவர்களால் கி. பி. 1932-ல் வெளியிடப்பட்டது.

சிவானந்தமாலை நானூற்றுப் பதினொன்று வெண்பாக்களாலாயது. இதில் நான்கு வெண்பாக்கள் திருஞானசம்பந்தர் வணக்கமா யமைந்தன.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூ லேனெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத் தெங்கே.

என்ற வெண்பாவைத் தன்னகத்துக் கொண்டது ; சைவசித்தாந்த வுண்மைகளைத் தெளிவாக உரைப்பது. இந்நூல் கி. பி. 1910-ல் முதலாக என்னால் வெளியிடப்பட்டது. வெளிப்பட்டபின் அகப்பட்ட எட்டுச் சுவடிகள் பல. இது திருத்தங்களோடு மீண்டும் வெளியிடத்தக்க நூல். கையெழுத்துப் பிரதிகளில் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை யென்பது இங்குக் குறிக்கற்பாலது.

தத்துவவிளக்கம் ஐம்பத்தொரு கலித்துறைகளா லாயது. இதனைக் கி. பி. 1918-ல் தாம் இயற்றிய உரையோடு பதிப்பித்த ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர் இதன் ஆசிரியர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது நன்மாமனாராகிய சம்பந்தசரணாலயர் என்றெழுதி வைத்தனர். அவர்க்குக் கிடைத்த திருநெல்வேலிப் பால்வண்ண முதலியார் பிரதியிலும் சூரியனார்கோயிலாதீனத்துப் பிரதியிலும் ஆசிரியர் பெயர் குறிக்கப்பட்டிருந்ததோ என்று தெரிந்துகொள்ளக் கூடவில்லை ; இந்நூலில் ஞானாசாரியர் துதி திருஞானசம்பந்தப் பெருமான் துதியே ; இதனையும் சிவானந்தமாலையையும் காழிக் கண்ணுடையவள்ளல் நூலென்று கொள்ளும் பிள்ளையவர்களுக்குத் தக்க ஆதாரமிருத்தல்வேண்டும். திருநெறி விளக்கம், பிராசாத விருத்தம் என்பனவும் அவ்வாசிரியர் இயற்றியருளியதாக



அவர்களே நியதிப்பயன் முகவுரையிற் காட்டியிருக்கின்றனர். அவற்றின் பிரதிகள் எனக்கு அகப்பட்டில. இங்குப் பெயராற் குறித்த நூல்களனைத்தும் ஒழிவிலொடுக்கவாசிரியர் தாமே யியற்றியனவோ அவர் வழி வந்து அப் பெயரைத் தாங்கிய வேறு பெரியார் ஒருவரோ பலரோ இயற்றியனவோ என்பது நன்கு ஆராயற்பாலது.

ஒழிவிலொடுக்கத்தினை நன்குணர்ந்து அதிற் சொல்லிய அனுபவங்களைத் தமவாக்கிக்கொண்ட பெரியார்கள் பலர் இங்கிருப்பர். அன்னார் யான்சொல்லிய அனைத்தையும் ஆமோதிப்பர். இந் நூலினை நன்குணர்ந்திலாதார்க்கும் இதனைப்பற்றிக் கேள்வியுற்றது மாத்திரமேயன்றி ஓதி யறியாதார்க்கும் இதனைக் கற்றுணர்தற்கண் ஊக்கமுண்டாகுமாயின் அதுவே யான் நூலைப்பற்றியும் அதன் ஆசிரியரைப் பற்றியும் இவ்வளவுங் கூறியதற்குத் தக்க பயனாகும்.

# புகலிவேந்தர் புனிதமொழி*

[ஈ. த. இராஜேசுவரி அம்மாள், எம். ஏ., எல். டி.]

இன்று எடுத்துக்கொண்ட விஷயம் புகலிவேந்தர் புனிதமொழி. அதாவது திருஞானசம்பந்தரின் பரிசுத்தமான தமிழ்மொழி என்பது பொருள். இவர் தமிழ் மொழியைப் பற்றியாது கூற வேண்டுமோ, அது சுருதியால் வெளிப்பட்டும், யுக்திக்குப் பொருந்தியதாயும், அனுபவத்தில் காணக்கூடியதாயும் உளதென்பது திண்ணம். நமக்குச் சுருதியாய் இருப்பன தமிழ்மறைகளான தேவாரம். அவற்றுள் புகலிவேந்தர் பாடிய திருமுறைகளில் திருக்கடைக்காப்பாய் நிற்

*இது சமாஜவிசேஷ மகாநாட்டில் திரு. அம்மையார் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு.

கும் பல செய்யுள்களில் தன்மொழி புனிதத்தமிழென்று பற்பல பதிகங்களில் வற்புறுத்தியும் கூறியுள்ளார். நமது சமய அபிமானத்தை மறந்து இவ்வாறு தற்புகழ்ச்சியாய்க் கூறுகின்றாரோ என்று நாம் எண்ணினும், தன்னுடையாற்றல் உணராத மன்பதைகளுக்கு அவ்வாறு தற்புகழ்ச்சியாய்க் கூறினும் அவருக்குத்தகும். ஆனால் அவ்வாறு தற்புகழ்ச்சியாய் மொழிந்தனரென்று கொள்ள அவர் திருஉள்ளம் வைக்கவில்லையென்றும் வேறு சில கருத்தால் அவ்வாறு கூறினாரென்பதும் பின்னர் காண்போமாக.

இங்கு தமிழ் மறையில் முதலாவதாக எடுக்கப்பட்ட இச்சமய குரவரின் மொழியாலேயும் முதல் மூன்று திருமுறைகள் மிக்க புனிதமொழி யென்பது ஏனைய சமயகுரவர்களின் கூற்றாலும் விளங்கும். இவர் பாடிய பதிகங்கள் இயற்றமிழ் வகையில் சிறந்த இயற்றமிழ் என்பது திருநாவுக்கரசராலும், இசைத்தமிழ் வகையில் சிறந்த இசைத்தமிழ் என்பது வன்றொண்டராலும் நிரூபிக்கலாம் (முறையே ஐந்தாம் திருமுறையிலும், ஏழாந்திருமுறையிலுங் காணலாம்.) திருநாவுக்கரசு திருவாய்மூருக்குச் சிவபெருமானை பின்தொடர்ந்து சென்று அங்கு பாடிய பதிகத்தில் புகலிவேந்தர் தமிழைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார் :—

“ திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடியடைப் பித்தாருந் நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.”

மொழியின் சக்தியால் கோயில் கதவை ஆடவைத்தல் சாமானியமான செய்கையன்று. தேகசக்தி முழுவதையும் மனதின் வழியாகச் செல்லவைத்து கண்ணுற்ற ஜடப் பொருளை ஸ்தூல யந்திரம்போல் அசைவித்தல் இன்றும் செய்யக்கூடிய காரியமாயினும் மனோவாக்குக் காயம் பரிசுத்தமில்லாதோன் செய்யக்கூடாத காரியமாகும். எனவே தனது வாக்கு பரிசுத்தமாயிருப்பினும் திருமறைக்காடு திருக்குறுந்தொகை பதிகம் முழுவதும் அப்பர் பாடும் வரையில் கதவு திறக்கப்படவில்லை. அவர் திருக்கடைக்காப்பு செய்யுளில் அரக்கனுக்கு அருள்வைத்த உமக்கு என்பேரில் இரக்கமில்லையா என்று சிவபெருமானிடத்தில் ஓலமிட்டுப் பாடிய பிறகே திருமறைக்காட்டின் கோபுரவாசற் கதவுகள் திறக்கப்பட்டன். இக்கருத்தையே மேற்கண்ட திருவாய்மூர் திருப்பதிகத்திலும் அமைத்துப் பாடினார். இவர் திறக்கப்பாடியது பதிகம் முற்றும் பாடிய பின்னரென்றால் திருஞானசம்பந்தர் பதிகம் ஆரம்பித்தபோதே கதவு அடைக்கப்பட்டது இவற்றின் தாரதரம் உணர்த்துவான் அப்பர் :—



“ திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடியடைப் பித்தாருந் நின்றார்.”

இதில் “உறைப்பு” என்பதில் வல்லின றகரம் வருவது காண்க. உறைப்பு = தாக்குதல். இதில் “உந்நின்றார் என்பதில் நகரம் கவனிக்க.

“உ + நின்றார் உந்நின்றார்”.

[விதி:— “ எகரவினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் மெய்தில் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுதனெறியே.”
(நன்னூல் - 163-ம் சூத்திரம்.)]

பிறவரின் அவையும் என்றதால் நகரம் சந்தியிற்றோன்றியது “உ” என்கின்ற சுட்டு அப்பர் எதிரில் நின்றிருந்த திருஞானசம்பந்தரைக் காட்டும். ஆகையால் அப்பர் கூற்றின் வண்ணம் புகலிவேந்தர் தமிழ் சிறந்த செந்தமிழ் என்றும் அது உறைப்பாய் தாக்கக்கூடிய சக்தி உடையதென்றும் அச்சக்தி ஜடஉலகத்தில் காணற்கரிய அற்புதங்களைச் செய்ய

வல்லதென்றும் கூற ஒரு சான்றாய் நிற்கும். சம்பந்தர் பாட்டின் உறைப்பு சமணர் கொளுத்திய தீயைப் பாண்டியனிடம் பையச்செல்ல வைத்ததும், பிறகு வெப்பு நோயைத் தீர்த்ததும், நீரோட்டத்தை எதிர் நோக்கி ஓலையைச் செல்ல வைத்ததும், முயலகனைத் தீர்த்ததும், வெந்த அங்கத்தைப் பூம்பாவை யாக்கினதும், அப்பர் திருவாக்கினின்று அக்காலத்திலேயே எதிர் பார்க்கக்கூடியவாயின.

இனி நம்பியாரூரர், புகலிவேந்தர் புனிதமொழியைப் பற்றியாது கூறுகின்றாரென்று காண்போம் :—

“ நல்லிசை ஞானசம்பந்தனு நாவுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப் பானைத்
தொண்டனே னறியாமை யறிந்து
கல்லியென் மனத்தைக் கசிவித்துக்
கழலடி காட்டி யென்களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவலந்தனில் வந்து கண்டேனே ”.

(சுந்தரர் - திருவலிவலம்.)

என இசைஞானி புதல்வர் சம்பந்தர் இசையைப்பற்றிப்பாடினார். ஆதலால் சம்பந்தர் இசைத்தமிழினும் சிறந்த இசைத்தமிழ் இல்லை என்பது வெளிப்படை. இதை ஆராயப் புகுவோமாயின் ஏன் சம்பந்தர் இசை மேலான இசைஎனின், சிவபெருமானுடைய சோதியானது அவரைச் சுற்றி யெங்கும் நிறைந்திருந்தது. அவர் போகுமிடமெல்லாம் அது அவரைத் தொடர்ந்தே சென்றது. இதற்குச் சான்று அவர் புனிதமொழியேயாம்:—

“ குற்றம் நீ குணங்கள் நீ கூடல் ஆலவாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ



கற்றநூற் கருத்து நீ யருத்த மின்ப மென்றிவை
முற்றும் நீ புகழ்ந்து முன் உரைப்பதென் முகம்மனே.”

(சம்பந்தர் - திருஆலவாய்.)

இவ்வாறு தன்னைத் தொடர்ந்திலங்கும் சோதியை நூலும் பொருளுமாய் அனுபவித்து அடைந்த இன்பத்தை மனதில் அடைத்து வைக்கமுடியாமல் ஆனந்த வெள்ளம் பொங்கித்ததும்பி ஓடுதலே சம்பந்தர் பதிகமாம். இதைத் திருத்துருத்திப் பதிகத்தில் காண்க.

“ களங்குளிர்ந்திலங்கு போது காதலானும் மாலுமாய்
வளங்கினம் பொனங்கழல் வணங்கி வந்து காண்கிலார்
துளங்கிளம் பிறைச் சென்னித் துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலாம் உகந்துகந் துரைப்பனே”:

தன் உளங் குளிர்ந்த போதெலாம் உகந்து உகந்து உரைத்தலே சம்பந்தர் தொழிலாயிருந்தது. ஆதலால், அவர் இசையானது சுயமாய்ப் பிறந்த இசை. பிறரிடம் கற்றதன்று ; வழங்கிவந்த இசையைச் சீர்திருத்தும் இசை. யாழ்மூரிப்போல் நூதனப் பண்களை உண்டாக்கியஇசை. இவற்றையெல்லாம் எண்ணியே சுந்தரர் ‘ நல்லிசை ஞானசம்பந்தர்,’ என்றனர். நமக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த தாயுமானவரும் :—

“ அன்றுமுதல் இன்றைவரைச் சனனகோடி
அடைந்தடைதிங் கியாதனையால் அழிந்ததல்லால்
இன்றைவரை முத்தியின்றே யெடுத்த தேகம்
எப்போதோ தெரியாதே யிப்போதே தான்
துன்று மனக் கவலை கெடப் புலைநாயேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே ! தூது
சென்றிடவே பொருளை வைத்த நாவலோய்!நஞ்
சிவனப்பா என்றஅருட் செல்வத் தேவே.”

என்னும் செய்யுளில் “துன்று மனக்கவலை கெடப் புலநாயே

னைத் தொழும்பு கொளச் சீகாழித் துரையே'' என்றூர் எனவே சம்பந்தர் தேவாரத்தைப் பாடும்போது எல்லாக் கவலைகளும் விலகிப் போகின்றன. அவர் செய்யுளின் இசையும், நயமும் பன்னீரைத் தெளித்து மயில் விசிறியால் விசிறுவதுபோல் இன்பம் கொடுத்துக் கொண்டே மனதைச் சீர் திருத்துகிறதே யல்லாது, ஊசிபோல் குத்தி நெருப்புபோல் காய்ச்சி உருக்கும் தொழில் உள்ளது அல்ல. கடூரச் சுபாவம், அவ்வாறு காட்டாமலே இனிய நடையில்,

"வம்மின்னடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய
உம்மன்பிஞெ டெம்மன்பு செய்தீசன் உறைகோயில்."

(சம்பந்தர் - திருவீழிமிழலை.

என்று நம்முடைய கையைப் பிடித்து ஈசன் சன்னிதானத்தில் நிறுத்தும். இதையே தாயுமானவர்:—

"வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளாற் சாருநாள் எந்நாளோ."

என்று அடியார் வணக்கத்தில் முறையிடுவார். கூன் பாண்டியன் காலத்திலிருந்து ஜார்ஜ் மன்னவர் காலம் வரையிலிருந்த புலவர் எவரும் சம்பந்தரைப் புகழாம லிருந்ததில்லை. ஆதலால் சுருதி முறையில் நாம் நோக்கும்போது திருஞான சம்பந்தர் தமிழ், பரிசுத்தமான தமிழ்மொழி என்று விளங்கும்.

(தொடரும்)

## பெரியார் பிரிவு

நமது சமாஜ ஆயுள் அங்கத்தவரும், சென்னை ஹிந்து சமயப் பாதுகாப்புக்கழகக் காரியதரிசியும், சிறந்த அன்பருமான சைவத்திருவாளர் - சி. எஸ். சுவாமிநாத முதலியார், பி. ஏ. அவர்கள் 5-10-34-ல் சிவபத மெய்திய செய்தியை மிக்க வருத்தத்தோடு அறிவிக்கிறோம். நமது பிரிவாற்றாமை யுணர்ச்சியை இதன் மூலம் தெரிவிக்கிறோம்.



**உரை** :—அன்பர்கள் புடைசூழ மிக மேலோனாகிய பெருமான் அந்தணனாக வடிவங்கொண்டு நிலமிசை எழுந்தருளி வந்தமையோடு ஞானிகள் சூழ, அச்சிவபெருமான் தில்லையாகிய பழையபதியிலே சபையின்கண் கூத்தியற்றுவான், தந்திரக்காரனாக வந்து எமது வீட்டிற் புகுந்து எம்மை அடிமையாக்கி எமது பணிவிடையை ஏற்றுக்கொள்ளுவான், அவன் சென்னிமிசை வைத்த திருவடித் தாமரைக்கண்ணே நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாக.

**குறிப்பு** :—பராபரன், சிவபிரான் வந்து நடஞ் செய்வான். புகுந்து பணிகொள்வான், வைத்த........ மலருமே யென முடிக்க. சித்தர்=சித்துடையவர், ஞானிகள். இல், உள்ளத்திற் கறிகுறி. ௪

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி
டாவகை நல்கினன், வேய தோளுமை பங்கன் எங்கள் திருப்
பெருந்துறை மேவினன், காயத் துள்அமு தூற ஊறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய, சேய மாமலர்ச் சேவ டிக்
கண்நம் சென்னி மன்னித் திகழுமே.

**உரைநடை** :—இரண்டா மடியை முதலிற் கொள்க.

**உரை** :—மூங்கிலின் தன்மையுடைய தோளினளாகிய உமைபாகன், திருப்பெருந்துறையில் விரும்பி வீற்றிருந்தவன், பொய்யாகிய உலகவாழ்க்கையை மெய்யென்று கருதி அதனைப் பொருட்படுத்தாத முறையை எனக்கு அளித்தான். உடம்பிலே ஆனந்த அமுதமானது சுரக்கச் சுரக்க, நீ பேரின்ப நிலையை அறிந்து கொள்வாயென, அடையாளங்காண்பித்த செம்மையாய திருவடித்தாமரைக் கண்ணே நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

**குறிப்பு** :—மாயம்=பொய், சூழ்ச்சி, மயக்கம். வேய்=மூங்கில். வேய - குறிப்புப் பெயரெச்சம். திருவண்டப்பகுதியுள், காயத்தமுதூறலை வர்ணித்தமை காண்க. பங்கன், மேவினன், நல்கினன், சேவடிக்கண் திகழுமே யென முடிக்க. ௫

சித்தமேபுகுந் தெம்மையாட்கொண்டு தீவினைகெடுத் துய்யலாம்
பத்திதந்து தன்பொற்கழற்கணே பன்மலர்கொய்து சேர்த்தலும்

முத்தி தந்திந்த மூவுல குக்கும் அப்புறத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர் சேவடிக்கண்நம் சென்னிமன்னி மலருமே.

**உரை :—** உள்ளத்தே புகுந்தருளி எம்மை அடிமையாகக் கொண்டு, தீவினைகளை யொழித்து உய்வதற்குரிய அன்பினைத்தந்து அவ்வன்பு காரணமாகத் தனது அழகிய திருவடியின்கண்ணே நாம் பல்வகைப் பூக்களைக்கொய்து சாத்துதலும், வீடளித்து நம்மை, மேல், நடு, கீழ் என்ற மூவிடத்துமுள்ள உலகங்களுக்கு அப்பால் உள்ள பேரின்ப நிலையில் வைத்திடும் அப்பனுடைய செவ்விய திருவடித் தாமரைக்கண், நமது தலைகள்பொருந்தி மகிழ்ச்சியுடன் விளங்கும்.

**குறிப்பு :—**சித்தம் = நினைவென்பாரு முளர். பொன் = அழகிய. தத்துவச் சார்பாய உலகங் கடந்த முதல்வனோடு கலத்தலாகிய நிலையென்பார், 'மூவுலகுக்கு மப்புறத்தே' என்றார். ௬

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருள் தந்
தருளினான், அறவை யென்றடி யார்கள் தங்க ளருட்கு ழாம்
புக விட்டுநல், உறவு செய்தெனை உய்யக்கொண்ட பிரான்
தன் உண்மைப் பெருக்கமாம், திறமை காட்டிய சேவடிக்
கண்நம் சென்னி மன்னித் திகழுமே.

**உரை :—**பிறவியாகிய இந்தக்கடலை நீந்துவதற்குத் தன் பேரருள் கொடுத்தருளினான். என்னை ஆதரவில்லாதவ னென்பது கருதி அடியார்களுடைய அருட்கூட்டத்திற்புகுவித்து, அவர்களை எனக்குச் சுற்றத்தாராக்கி, என்னைப் பிழைக்கும்படி ஆட்கொண்ட வள்ளலின் மெய்யான மிகுதிப்பட்ட திறமைகளைக் காண்பித் தருளிய சேவடிக்கண் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

**குறிப்பு :—**அறவை = எல்லாம் அற்றவன் ; அநாதை. பெருக்கமாம் திறமை = மிகுதியான திறமை. ௭

புழுவி னாற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனை
யொழி வித்திடும், எழில்கொள் சோதியெம் ஈசன் எம்
பிரான் என்னுடையப்பன் என்றென்று, தொழுத கையின



ராகித் தூய்மலர்க் கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு, வழு
விலாமலர்ச் சேவ டிக்கண்நம் சென்னி மன்னி மலருமே.

**உரை:—**புழுக்களினாற் பொதியப்பட்டுள்ள உடம்பிலே நிலையாத வாழ்க்கையை நீக்கிவிடும் எழுச்சியுடைய ஒளியான எமது ஆண்டவனே, எம்பெருமானே, என்னுடைய தந்தையே என்று சொல்லிச் சொல்லிக் கூப்பிய கையையுடையராய்ப் புனிதமான பூப்போன்ற கண்களிலே நீர் பெருகப்பெற்ற அடியவர்கட்குத்தவறாது நலம் பயக்குஞ் செய்ய திருவடித் தாமரையின்கண் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

**குறிப்பு :—**பொய் = நிலையில் வாழ்க்கை. எழில் = எழுச்சி ; அழகு. உள்ளம் புனிதமாகவே, கண்களும் புனிதமாயின போலும் ; ஆதலால், 'தூமலர்க்கண்கள்' என்றார். ௮

வம்ப னாய்த்திரி வேனை வாவென்று வல்வி னைப்பகை
மாய்த்திடும், உம்ப ரான்உல கூட றுத்தப் புறத்த னாய்நின்ற
எம்பிரான், அன்ப ரானவர்க் கருளி மெய்யடி யார்கட் கின்
பந் தழைந்திடுஞ், செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

**உரை:—**வீணனாய் அலைவேனை 'நீ இங்கேவா' என்றழைத்து எனது கொடிய வினையாகிய பகையினை அழித்திடும் வானவன், உலகங்களெல்லாவற்றினூடும் இயைந்து அவற்றிற்கப்பாற் பட்டவனாய் நின்ற எமது தலைவன், அன்பராயினார்க்குப் பேரின்பத்தைப் பெருக்கும் அவனது செவ்விய பொன்போன்ற தாமரை மலரை யொத்த திருவடியின்கண், நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

**குறிப்பு :—**வம்பன் = பயனற்றவன். உம்பரான் = மேலுலகத்தான். 'உலகூடறுத்து' என்றது அனற்பிழம்பாய் அயன்மால் அடிமுடிதேட நின்ற நிலையைக் குறிக்கும். ௯

முத்த னைமுதற் சோதியை முக்கண் அப்பனை முதல்
வித்தினைச், சித்த னைச்சிவ லோக னைத்திரு நாமம் பாடித்
திரிதரும், பத்தர் காள்இங்கே வம்மின் நீர்உங்கள் பாசந்தீரப்

பணிமினோ, சித்த மார்தரும் சேவ டிக்கண்நம் சென்னி மன்னித் திகழுமே.

**உரை:**—இயல்பாகவே பாசநீக்கமுள்ளவனை, ஆதியான ஒளியானவனை, மூன்று கண்களுடைய தந்தையை, எல்லாவற்றிற்கும் அடிப்படையான வித்துப்போல்வானை, ஞானவடிவனைச், சிவலோக நாதனை, அவன் திருப்பெயர் கூறிப்பாடி அலையும் அன்பர்களே இங்கே வாருங்கள், நீர், உங்கள் மலமறும்படி வணங்குங்கள், என் உள்ளத்தில் நிறைந்த செய்ய திருவடிக்கீழ் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

**குறிப்பு:**—இறையன்பர்களைத் திருப்பெருந்துறை ஞானாசாரியன் பால்வந்து மலமறப் பெறுமாறு தூண்டுதல் இதனுட் கூறப்பட்டது. சித்தம் என்பது, நினைவையுங் குறிக்கும். ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவார்த்தை

## அறிவித்து அன்புறுதல்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**மா**திவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேய சோதி, கோதில் பரங்கருணையடியார் குலாவு நீதி குணமாகநல்கும், போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்திழிந், தாதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறிவார் எம்பிரானாவாரே.

**உரை:**—பெண்ணமர்ந்த பாகத்தன், மந்திரங்கள் பொருந்திய மொழி உடையான், இதயமலரில் வீற்றிருக்கும் ஒளியானவன், குற்றமற்ற மேலான அருள்வடிவன், அடியார்கள் கொண்டாடும் நீதியானவன், நீதியினையே குணமாகக் கொண்டருள் புரிகின்ற அரும்புகள் மலர்கின்ற சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில் தங்கியருளிய எமது புண்ணியமூர்த்தி, மண்ணுலகத்தே இறங்கிவந்து எல்லாவற்றிற்கு முதலாகிய பெரும்பொருளை வெளிப்படுத்திய அருட்செய்கையை அறியுந்தன்மையார் எமது தலைவராவர்.

**குறிப்பு:**—இவர்தல்=ஊர்தல்; அமர்தல். மறை=இரகசியமெனக் கொண்டு உபதேச மொழி பயின்ற வாசகனென்பாருமுளர். கைம்மாறுகருதாக கருணையாதலால் 'கோதில் பரங்கருணை' என்றார். மலர் என்பது இதயத்திற்கு ஆகுபெயர். அடியார் குலாவு நீதி குணமாக நல்கும் என்பதற்கு அடியார் கைக்கொண்டொழுகு முறையைக் குணமாகக் கொண்டருளுமெனவுங் கூறுவர். போது=விரியும் பருவத்தரும்பு. வெளிப்படுத்த என்பது 'வெளிப்படுத்திய' என்பதன் குறுக்கம். ௧

மாலயன் வானவர் கோனும்வந்து வணங்க அவர்க்கருள் செய்தஈசன், ஞாலம் அதனிடை வந்திழிந்து நன்னெறி

காட்டி நலம்திகழுங், கோல மணியணி மாடநீடு குலாவும் இடவை மடநல்லாட்குச், சீல மிகக்கருணையளிக்குந் திறமறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—திருமாலும், பிரமனும், தேவர்கட் கரசனாகிய இந்திரனும் வந்துபணிய அவர்கட்கு அருள்புரியும் ஆண்டவன், உலகத்தினிடை குருவாகி இறங்கிவந்து ஞானநெறியினை அறிவுறுத்தி அழகு விளங்குகின்ற நல்ல வடிவுடைய ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடங்களை உடையதாய் நெடுநாள் விளங்குகின்ற திருவிடை மருதூரில்ஒரு பெண்ணடியவர்க்குக் குணநயமிகும்படியாக அருள் செய்த வகையினை அறிபவர்கள் எமது தலைவராவர்.

**குறிப்பு:**—வந்திழிந்து என்பதை இழிந்துவந்து என மாறுக. நலம்=அழகு. கோலம்=வடிவு. இடவை=திருவிடை மருதூர். அது பழம்பதியாதலின் ‘நீடுகுலாவு’ மென்றார். இதனை ‘நல்லாட்கு’ என்பதோடு முடித்து நெடிது அன்பு பாராட்டு மெனவு முரைப்பர். சீலம்=நல்லொழுக்கம். சீலமிகுதலைக் கண்டு அருள் செய்தாரென்றலுமுண்டு. ௨

அணிமுடி ஆதி அமரர்கோமான் ஆனந்தக் கூத்தன் அறுசமயம், பணிவகை செய்து படவதேறிப் பாரொடு விண்ணும் பரவியேத்தப், பிணிகெட நல்கும் பெருந்துறையெம் பேரரு ளாளன்பெண் பாலுகந்து, மணிவலை கொண்டு வான் மீன்விசிறும் வகையறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—அழகிய சடைமுடியை உடைய முதல்வன், விண்ணவர் தலைவன், ஆனந்தக் கூத்துடையவன், அறு சமயங்களும் தன்னை வணங்கும்படி செய்து மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் வாழ்த்தி வழிபட அவர்கள் பிறவிநோய் ஒழியும்படி அருள் செய்யும் பெருந்துறையையுடைய நமது பெருங்கருணையாளன், (வலைஞர் மகளாகிய) உமையம்மையாகிய பெண்ணினை மணக்க விரும்பித் தோணியேறி, அழகியவலை கொண்டு பெரிய கெளிற்று மீனை வீசிப் பிடிக்குந் திறத்தை அறியுந் தன்மையார் எமது தலைவராவர்.



**குறிப்பு:**—அறுசமய மென்றது உட்சமயங்களை. அவை, கணபதி வழிபாடு, முருகன் வழிபாடு, அம்மை வழிபாடு, திருமால் வழிபாடு, கதிரவன் வழிபாடு, சிவ வழிபாடு என்று முரைக்கலாம். படவதேறி என்பதை மணிவலை கொண்டு என்பதனோடு முடிக்க. இதனுட் கூறப்பட்டதைத் திருவிளையாடற் புராணம் வலைவீசிய படலத்துட் காண்க.

வேடுரு வாகி மகேந்திரத்து மிகுகுறை வானவர் வந்து தன்னைத், தேட இருந்த சிவபெருமான் சிந்தனை செய்தடியோங்களுய்ய, ஆடல் அமர்ந்த பரிமாஏறி ஐயன் பெருந்துறை ஆதிஅந்நாள், ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட இயல்பறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—மகேந்திர மலையில் வேட்டுவ வடிவங்கொண்டு தன்பாலிரத்தற்குரிய மிகுந்த குறைகளை உடைய விண்ணவர் போய்த் தன்னைத் தேடும்படியாக வீற்றிருந்தருளிய சிவபெருமான், அடியோங்கள் உய்வதை எண்ணி வலிமை பொருந்திய குதிரையில் ஏறினவன், தலைவனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்தில் தன்னுடைய நண்பர்களை எவ்விடத்து மாட்கொண்டருளிய தன்மையை அறியவல்லா ரெமது தலைவராவார்.

**குறிப்பு:**—‘வேடுருவாகி’ யென்பதை, ‘தேட விருந்த’ என்பதனோடு முடிக்க. மகேந்திரம் பொதிகை மலைக்குத் தெற்கேயுள்ளதென சிவதருமோத்திரங் கூறும். அதனைக் கயிலாய மென்பாருமுளர். வேடுருவாகி யென்பதற்கு வேண்டுருவாகி யெனப் பொருள் கொண்டு இறைவனியக்க வடிவங் கொண்டிருந்தா ரென்பர். அக்கதை கேனோபனிடத்திற்கூறப்பட்டது. அடியோங்களுய்யச் சிந்தனை செய்து எனமாறுக. சிந்தனைசெய்து என்பதைச் சிவபெருமானுக்கும், அடியோங்கள் என்பதற்கு மியைப்பதுண்டு. ஆடல்=வலிமை. ஏறி என்பதை வினையெச்சமாகக் கொண்டு ஆண்டுகொண்ட என்பதனோடு முடிப்பது முண்டு. ஏடர்கள்=நண்பர்கள். ௩

வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கடலாய்அடியார், பந்தனை விண்டற நல்கும்எங்கள் பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள், உந்து திரைக்கட லைக்கடந்தன்

றோங்கு மதிலிலங் கைஅதனிற், பந்தணை மெல்விர லாட்கரு ளும் பரிசறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—விண்ணவர்கள் வந்து தன்னை வணங்கி வாழ்த்த அவர்கட்குப் பொருள் புரியுங்கடலாய், அன்பர்களுடைய பாசக்கட்டு நீங்கியொழியும்படி அருள் செய்யுமெங்கள் மேலோனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்திலே, திரைவீசுகின்ற கடலைக் கடந்து உயர்ந்த மதில் சூழ்ந்த இலங்கையின்கண், பந்தின் வடிவமைந்த மெல்லிய விரலை உடைய வண்டோதரிக்கு அருள்புரிந்த வகையினை யறிவார் எமது தலைவராவர்.

**குறிப்பு:**—கடலாய் என்பதை நல்கும் என்பதோடு முடிக்க. பந்தனை = கட்டு; பாசம். விண்டு = பிரிந்து; நீங்கி. உந்துதிரை என்பதைத் திரை உந்து என மாற்றுக. அன்று - சாரியை. ௫

வேவத் திரிபுரம் செற்றவில்லி வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ, ஏவற்செ யல்செய்யுந் தேவர்முன்னே எம்பெருமான்தான் இயங்குகாட்டில், ஏவுண்ட பன்றிக் கிரங்கிஈசன் எந்தை பெருந்துறை ஆதிஅன்று, கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—திரிபுரங்கள் வெந்துபோகும்படி கோபித்த வில்லையுடையவன், வேட வடிவங்கொண்டு, காவல் நாய்கள் சூழ்ந்துவரத் தாம் ஏவுகின்ற பணியைச் செய்யும் விண்ணவர் முன்செல்ல எம்பிரான் தான் செல்லுகின்ற காட்டில் அம்பு தைத்திறந்த தாய்ப் பன்றிக்கு இரங்கி ஆண்டவன் அப்பன், திருப்பெருந்துறை முதல்வன், அந்நாளில் தனிப் பன்றி வடிவங்கொண்டு, பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுத்த திருவுள்ளக் கருத்தை யறியுந் தன்மையார் எமது தலைவராவர்.

**குறிப்பு:**—கடி = காவல். ஏவு = அம்பு. கேவலம் = தனிமை. வில்லி, எம்பெருமான், ஈசன், எந்தை, ஆதி, காட்டில் இரங்கி அன்று, கொடுத்த, கிடப்பு, அறிவார் என முடிக்க. ௬

நாதம் உடையதோர் நற்கமலப் போதினில் நண்ணிய நன்னுதலார், ஓதிப் பணிந்தலர் தூவியேத்த ஒளிவளர்



சோதியெம் ஈசன்மன்னும், போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப், பேதங்கெடுத்தருள் செய்பெருமை அறியவல்லார் எம்பிரா னாவாரே.

**உரை:**—வண்டின் ரீங்கார ஒலியினை யுடைய அழகிய தாமரை மலர்களில் விரும்பி வைகும், அழகிய நெற்றியையுடையராகிய, கலைமகளும், திருமகளும் வாழ்த்தி வணங்கி மலர்தூவி வழிபடும்படி ஒளி மிகுகின்ற சோதி வடிவனாகிய எமது ஆண்டவன், வீற்றிருக்கும், மலர்கள் விரிகின்ற பொழில் சூழ்ந்த திருப்பெருந்துறையின்கண் எமது புண்ணியமூர்த்தி மண்ணுலகத்தே குருவாய்த் தோன்றியருளி வேற்றுமையைக் கெடுத்து அருள்செய்கின்ற பெருமையை அறிய வல்லவர்கள் எமது தலைவராவர்.

**குறிப்பு:**—நாதம் = வண்டுகளினொலி. நன்னுதலார் என்றமையாற் கலைமகளுந் திருமகளுங் கூறப்பட்டனர். சோதி என்பதைப் பெருந்துறை என்பதோடு சேர்ப்பது முண்டு. பேதமென்பது பாசத்தாலேற்பட்ட வேற்றுமை. பாசத்தை நீக்கி அத்துவிதக் கலப்பினை யருள் செய்தலால் 'பேதங் கெடுத்து' என்றார். ௭

பூவலர் கொன்றைய மாலைமார்பன் போருகிர் வன்புலி கொன்றவீரன், மாதுநல் லாளுமை மங்கைபங்கன் வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன், ஏதில் பெரும்புகழ் எங்களீசன் இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும், ஓவிய மங்கையர் தோள்புணரும் உருவறிவார் எம்பிரா னாவாரே.

**உரை:**—அழகு விளங்குகின்ற கொன்றைப் பூவினாலாகிய மாலையையணிந்த மார்பன், போர் செய்தற்குரிய நகங்களைக்கொண்ட வல்லமை மிகுந்த புலியினைக் கொன்ற வீரன், உமை மங்கை பாகன், வளம்பொருந்திய சோலை சூழ்ந்த அழகிய திருப்பெருந்துறை மன்னன், குற்றமற்ற பெரும்புகழையுடைய எங்கள் ஆண்டவன், பெரிய கடலரசனுக்கு நெருப்பிற் றோன்றிய சித்திரம்போன்ற அழகிய நங்

கையர் தோள்களைச் சேர்ந்தருளும் அவன் திருவடிவை அறியவல்லார் எமது தலைவராவர்.

**குறிப்பு** :—பூ=அழகு. அலர்=விளங்கு. உகிர்=நகம். தாருகாவனத்து முனிவர் விடுத்த வேள்விப் புலியினைக் கொன்று அதன் தோலை யுரித்துப் போர்த்த கதை வெளிப்படை. ஏதில்=குற்றமில்லாத. ஈசன் என்பதை உரு என்பதனோடு முடிக்க. வாணன்=வாழ்+நன்=வாழ்பவன். இங்கே அரசனென்ற பொருளில் வந்தது. ஓவியம்=சித்திரம். ௮

தூவெள்ளை நீறணி எம்பெருமான் சோதிம கேந்திர
நாதன்வந்து, தேவர் தொழும்பதம் வைத்தஈசன் தென்னன்
பெருந்துறை ஆளிஅன்று, காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக், கேதங் கெடுத்தென்னை
ஆண்டருளுங் கிடப்பறிவார் எம்பிரா னாவாரே.

**உரை** :—பரிசுத்தமான திருவெண்ணீறணிந்த எமது பெருமானாகிய ஒளி வடிவமான மகேந்திரமலைக் கதிபதி, தானே வந்தருளி விண்ணவர் வணங்குகின்ற திருவடியை (என்தலை மீது) வைத்தாண்டவன், அழகிய நல்ல திருப்பெருந்துறை மன்னன், அந்நாளில் எனக்கு அன்பு மிகும்படி அருள்காட்டித் தனது திருவடிகளையுங் காட்டி யருளி, உள்ளங் கனிந்துருகும்படி, துன்பங்களைத் தொலைத்து என்னை ஆட்கொண்டருளுந் திருவுள்ளக் கருத்தை அறிவாரெமது தலைவராவர்.

**குறிப்பு** :—ஆளி = ஆள்பவன். கேதம் = துன்பம். எம்பெருமான், நாதன், ஈசன், ஆளி, அருளுங் கிடப்பு அறிவார் என முடிக்க.

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான் அடியார்க் கமு
தன் அவனிவந்த, எங்கள் பிரான்இரும் பாசந்தீர இகபர
மாயதோர் இன்பமெய்தச், சங்கங் கவர்ந்துவண் சாத்தி
னோடுஞ் சதுரன் பெருந்துறை ஆளிஅன்று, மங்கையர் மல்
கும் மதுரைசேர்ந்த வகையறிவார் எம்பிரா னாவாரே.

**உரை** :—அழகிய அருட்கண்ணை உடையவன், எங்கள் விண்ணவர் தலைவன், அடியார்கட்குச் சாவா மருந்தானவன், நில உலகிலே



குருவாகிவந்த எங்கள் பெருமான், மிக்க திறமையுடையவன், திருப்பெருந்துறை மன்னன், அவன் அடியார்களுடைய பெரிய மும்மலப் பற்று நீங்கவும், இம்மை மறுமையில் ஆவ்தோர் பேரின்ப மடையும் பொருட்டும் அந்நாளில் சங்கினாலாகிய வளையல்களை எடுத்துக் கொண்டு மிகுந்த சரக்கொடு (வளையல் விற்பதற்கு)ப்பெண்கள் நிறைந்த மதுரைப்பதியை அடைந்த விதத்தை யறியவல்லார் எமது தலைவராவர்.

**குறிப்பு** :—அங்கணன், பெம்மான், அமுதன், பிரான், சதுரன், ஆளி, தீர, எய்த, கவர்ந்து, சேர்ந்தவகை யறிவாரென முடிக்க. சங்கங் கவர்ந்து என்பதற்குச் சங்கங் கவர எனப் பொருள் கொள்வாருமுளர். பெண்களுடைய சங்க வலையல்களைக் கவர்வதற்கு மதுரை சேர்ந்தார் என்பது கருத்து. சாத்து=சரக்கு. ௧௦

திருச்சிற்றம்பலம்

### தில்லையில் அருளிய

# எண்ணப்பதிகம்

## ஒழியா இன்பத்துவகை

### ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்திமை யும்பெற வேண்டுஞ், சீருரு வாய சிவபெரு மானே செங்கம லமலர் போம், ஆருரு வாயஎன் னாரமு தேஉன் அடியவர் தொகை நடுவே, ஓருரு வாயநின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்கொண் டருளே.

**உரைநடை :**—சீரு...சிவபெருமானே.......அமுதே என்பதை முதலிற் கொள்க.

**உரை:**—சிறப்புடைய திருவடிவங் கொள்ளுஞ் சிவபெருமானே, செந்தாமரைப் பூப்போன்ற அரிய செம்மேனியினனாகிய எனது கிடைத்தற்கரிய அமுதமாவானே, நிலவுலகிலே உடம்பெடுப்பதாகிய பிறப்பு ஒழியவேண்டும். அன்புடைமையைப் பெறவேண்டும். உனது அன்பர் கூட்டத்தின் நடுவே ஒப்பற்ற திருவடிவுடைய உன் திருவருள்காட்டி அடியேனையும் உய்திக்கு ஏற்றுக்கொண் டருள்க.

**குறிப்பு ;**—பார்=நிலவுலகம். 'செங்கமல மலர்போலும்' என்பதைச் 'சீருவாய' என்பதனோ டியைக்கலாம். ஆருருவாய - என்பதற்கு, அரிய இயல்புடைய என்றும் பொருள் கொள்ளலாம். ஓருருவென்றது, ஞானசாரிய வடிவத்தை. க

உரியேன் அல்லேன் உனக்கடிமை உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந், தரியேன் நாயேன் இன்னதென் றறியேன் சங்கரா கருணையினால், பெரியோன் ஒருவன் கண்டு கொள்



என்றுன் பெய்கழல் அடிகாட்டிப், பிரியேன் என்றென் றருளிய அருளும் பொய்யோ எங்கள் பெருமானே.

**உரைநடை:**—'எங்கள் பெருமானே' என்பதை முதலிற்கொள்க.

**உரை :**—எமது தலைவனே! உனக்கடிமையா யிருத்தற்கு உரிய தகுதி உடையேனல்லேன். ஆனால் உன்னைவிட்டு நீங்கி, ஒரு சிறிது நேரங்கூட நான் (தனியே இருத்தலைப்) பொறுக்கமாட்டேன். நாயனைய யான் இது என்ன காரணம் என்றறிந்திலேன். பெரியோன் ஒருவன் என்மீது வைத்த இரக்கத்தால் உன்னுடைய கழல் செறித்த திருவடிகளைக் காட்டி, அவற்றைப் பார்த்துக்கொள் என்று கட்டளையிட்டு, உன்னைப் பிரியமாட்டேனென்று என்னிடம் கூறிப்போனது பொய்யாகுமோ?

**குறிப்பு :**—திருப்பெருந்துறையில் இறைவன் உபதேசம் பண்ணினதைக் கூறி, அது பொய்யாமோ வென்றது. அது உண்மையானால், இறைவன் தன்னைப் பிரியாதிருத்தல் வேண்டுமென்று குறிப்பித்தார். 'பெரியோன்' என்று இறைவனைப் படர்க்கையாகக் கூறியது ஒரு நயம். உ

என்பே உருக நின் அருள் அளித்துன் இணைமலர் அடிகாட்டி, முன்பே என்னை ஆண்டு கொண்ட முனிவா முனிவர் முழுமுதலே, இன்பே அருளி எனையுருக்கி உயிருண்கின்ற எம்மானே, நண்பே யருளாய் என்னுயிர் நாதா நின்னருள் நாணுமே.

**உரைநடை :**—கடைசியடியை என் உயிர் நாதா நாணுமே நின்னருள் நண்பே யருளாய்' என அமைத்துப் பொருள் கொள்ளுக.

**உரை :**—எலும் புருகும்படியாக நின்திருவருளை மிக நல்கி உன் தாமரை யடிகள் இரண்டையுங் காட்டிப் (பக்குவம் வரு) முன்னரே என்னை ஆட்கொண்டருளிய தவ வடிவனே, துறவிகளின் முழுத்தலைவனே, பேரின்பமே கொடுத்தருளி என்னை உருகுவித்து எனது உயிர்ப்போதத்தைத் தொலைக்கின்ற எமது பெரியோனே, எனது உயிர்க்குயிரானவனே, கூசாமல் உன்னுடைய திருவருள், எனது நட்பாகும்படி அருள் செய்யவேண்டும்.

**குறிப்பு**:—முனிவா=துறவியே என்று முனைப்பர். உயிருண்டல்=தற்போத மிழப்பித்தல். ௩

பத்திலனே னும் பணிந்திலனே னும்உன் உயர்ந்தபைங்
கழல்காணப், பித்திலனே னும் பிதற்றிலனே னும் பிறப்
பறுப் பாய்எம் பெருமானே, முத்தனை யானே மணியனை
யானே முதல்வனே முறையோஎன், றெத்தனை யானும்யான்
றொடர்ந் துன்னை இனிப்பிரிந் தாற்றேனே.

**உரைநடை**:—எம்பெருமானே - என்பதை முதலிற் கொள்க.

**உரை**:—எமது தலைவனே! அடியேன் உன்னிடத்திற் பற்று இல்லாதவனாயினும் உன்னை வழிபடேனாயினும் உனது மேலான பசுமையான திருவடிகளைக் காண்பதற்கு ஆசைப்படேனாயினும், உன்னைத் துதித்திலேனாயினும், எனது பிறப்பைக் களையவேண்டும். ஏனெனில், முத்துப் போன்றவனே, மாணிக்கம் போன்றவனே, ஆதியானவனே, உன் பெயரைக் கூறி ஓலமிட்டு, உன்னை எந்த அளவிலாவது யான் தொடர்ந்து பற்றினமையால், இனிமேல் உன்னைப் பிரிந்து, பிரிவாற்றாமையைப் பொறுத்திருக்கமாட்டேன்.

**குறிப்பு**:—பத்து, பற்று என்பதன் மருவு. பத்தி யென்பதன் குறை யென்பாருமுளர். முறையோ, என்றல் தகுதியோ வென்று கேட்டல்.

காணும தொழிந்தேன் நின்திருப்பாதங் கண்டுகண்
களிகூரப், பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னைஎம் பெருமானே, தாணுவே அழிந்தேன் நின்னி
னைந் துருகுந் தன்மைஎன் புன்மைகளாற், காணும
தொழிந்தேன் நீயினி வரினுங் காணவும் நாணுவனே.

**உரை**:—எம்பெருமானே, நினது திருவடிகளைப் பார்ப்பதை விட்டேன். பார்த்து எனது கண்கள் மகிழும்படியாகப் போற்றுவதை விட்டேன், புகழ்வதையும் விடுத்தேன். உறுதியானவனே, (பின் வேறுயாதுசெய்தேன் என்னில்) நான் அறிவு அழிவுற்றேன். உன்னை நினைந் துருகுகின்ற (அடியார்) தன்மைகளையும், எனது கீழ்மை



காரணமாக, பார்ப்பதை விடுத்தேன். ஆதலால், நீ இனிமேல் பழைய வடிவந் தாங்கி வந்தாலும் உன்னைப் பார்ப்பதற்குங் கூசுவேன்.

**குறிப்பு**:—காணுமது=காணுஞ் செயல். பேணுதல்=வணங்குதல். பின்னை, வினைமாற்றுப் பொருளில் வந்தது. ௫

பால்திரு நீற்றெம் பரமனைப் பரங்கரு ணையோடும்
எதிர்ந்து, தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன், போற்றியென் அமுதே எனநினைந்
தேத்திப் புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே, ஆற்றுவ
னாக உடையவ னேஎனை ஆவஎன் றருளாயே.

**உரைநடை**:—'உடையவனே' என்பதை முதலிற் கொள்க.

**உரை**:—முதல்வனே, பால்போலும் வெள்ளிய திருநீறணிந்த பெரியோனாகிய உன்னை உனது மேலான திருவருட் சத்தியோடு எதிர்ப்பட்டுத் தோன்றி உண்மையன்பர்க்கு அருள்வழி நல்கும் ஒளியான உன்னை அறவழி நில்லாத நான், வணங்கி, எனது சாவா மருந்தே யென வெண்ணி வழிபட்டுத் துதித்துக் கூவி யரற்றி என் நெஞ்சகத்தே ஆறுதலுடையனாகும்படி, ஐயோ வென்றிரங்கி அருள் செய்வாயாக.

**குறிப்பு**:—கருணை=அருட்சத்தி. தோற்றி=தோன்றி; செய்யுள்பற்றி வலித்தது.

திருச்சிற்றம்பலம்

## தில்லையில் அருளிய

# யாத்திரைப்பத்து

### அனுபவ அதீதம் உரைத்தல்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறி
யோமை, ஓவா துள்ளம் கலந்துணர்வாய் உருக்கும் வெள்
ளக் கருணையினால், ஆவா என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப் படுமின், போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே.

**உரை :**—மலர் நிறைந்த முடியுடைய அரசனாகிய எமது பாம்பணிந்த பெருமான், சிறியோங்களாகிய நம்மை ஓயாமல் உள்ளத்திற் புகுந்து அறிவில் அத்துவிதமாய்க்கலந்து உருகுவிக்கும் அருள்வெள்ளங் காரணமாக, இரங்கி அருள் அளிக்கப்பெற்று அன்பாய் ஆட்பட்டவர்களே வந்து ஒருங்கு சேருங்கள். நிலையா வுலகை விடுத்து, நம்மையுடையவனது திருவடியை அடைதற்குப் போவோமாக. அதற்குரிய சமயம் வந்துவிட்டது.

**குறிப்பு :**—புயங்கம்=பாம்பு. அல்லது ஒருவகைக் கூத்து. உடையான் கழல்புகவே பொய்விட்டு எனமாறுக. 'போவோம்' என்பதைப் புகவேஎன்பதோடு முடிக்க. 'காலம் வந்தது காண்' என்பதை இறுதியிற் சேர்க்க. ௧

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப் பெருமான்
விட்டு ழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா
விட்டே விடுமின்கள், நகவே ஞாலத் துள்புகுந்து நாயே
வேறுயாது ...யாண்ட, தகவே யுடையான் தனைச்சாரத் தளரா
நினைந் துருகு... நாமே.



லின் அதுபற்றி யிழுக்கென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அவை வெவ்வேறு பெயர்பெறும் வழியும் அவர் கூறியவாறு பெயர் பெறாது வேறு பெயர் பெறுமாறும், அவை மாயாகாரியங்களேயாமாறும், அவை தொக்க சமுதாயத்தினும் ஆன்மாவெனப் பெயர் பெறாது வேறுபெயர் பெறுமாறு முணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

காணில் கலை ஆதி மண் அந்தம் (ஆம்) - அங்ஙனஞ் சமுதாயமாதற்குரியவை யாவையென்று அளவைகளா னறியப்புகிற் கலைமுதனிலமீறாகிய தத்துவங்களேயாம்,—அவை மாயை நிலையாவாம் - அவையனைத்தும் மாயையின் காரியங்களாகலின் நிலையுதலின்றிச் சிலகால நின்றழிவனவாம்,—ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில் - அவை தொக்க சமுதாயத்தின் விளங்கித் தோன்றுவதாய ஞானத்தினியல்பை அசையாமற் கருத்தை யொருக்கி முன்னுணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதென்றாராயின்,—அது தீபமேபோலத் தனுவாம் - அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குத் தூலசூக்கும பரங்களாகிய உடம்பாம்,—தான் அத்தின் வேறு ஆகும் தான் - ஆதலாற் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பின் வேறாம்.

இவ்வாறு மூன்று சூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அனுமானவளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகமவளவையே யமையுமாகலின் அனுமானவளவை மிகையாம்போலுமெனின்,—ஆகாது : மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச்சமய நூல்களை நோக்கியவழிச் சைவாகமப் பொருளின் மலைவு நிகழாமைப்பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னும் நான்குவகையானன்றி ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவங் கூடாமையிற் சிந்தனை செய்து, வன்மை மென்மைகளை யுணர்ந்து தெளிந்து கோடற்பொருட்டும் கருதலளவையும் வேண்டப்படுமாகலானென்க.

# இலக்கணவியல்

## நான்காஞ் சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா(து)
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

சூ—இதுவுமது.

சூத்திரக்கருத் துணர்த்துதனுதலிற்று. பிரமாணம் இலக்கணமிரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்றென்னு முறைமைபற்றி மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட பதி பாச பசுக்களுக் கிலக்கணம் எதிர் நிரனிறையாக வைத்துக் கூறுவான்றொடங்கி அவற்றுள் இது மேலடுக்க நின்ற ஆன்மாவினிலக்கணங் கூறுதனுதலிற்று. சொற்பல்காமைப்பொருட்டும் ஒத்து வேறாயவழியும் இயைபுடைமை யுணர்ந்து கோடற்பொருட்டும் ஈண்டு இதுவுமதுவென மாட்டெறிந் துரைத்த ஆசிரியர், இங்ஙன முரைத்துக்கோடற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினதுண்மை யுணர்த்துதனுதலிற்றெனச் சிறந்தெடுத் தோதாது பொதுப்பட ஆன்மப்பிரகாச முணர்த்துதனுதலிற்றென்ற தூஉமென்க. இவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தின் ஆன்மாவின துண்மை கூறுமுகத்தாற் றொகுத்தோதிய அஞ்சவத்தை ஈண்டிலக் கணங் கூறுமுகத்தான் விரித்தோதப்படுதலின், இதுவுமதுவென்றது மேலைச்சூத்திரப் பொருளோடு மாட்டெறிந்ததென் றுரைப்பினுமாம். இதனானுஞ் சூத்திரவியைபு இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு.

ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னு நான்கனுள் ஒன்றன்றாயினும் நுண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன்றொழி னடாத்தும் அரசன்போல, சகசமலத்தினான் உணர்வின்றிக் கஞ்சுகம் போலுங் கலாதிகளாற் பொதுவகையான் உணர்வு நிகழினுஞ் சிறப்பு வகையான் நிகழுமாறு அவற்றாற் பெறப்படாமையிற் சிறப்புவகையா னுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிரமுதலிய ஐந்தவத்தை யுடைத்தாம்.



எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக் கிலக்கணமென்றவாறாயிற்று. இஃது உயிர்க்குத் தடத்தலக்கணமெனப் படும் பொதுவியல்பு. ஒன்றன்றாயினும் சகசமலத்து உணராது அமைச்சரசேய்ப்ப அவற்றோடு சந்தித்து நின்று அஞ்சவத்தைத்தாமென வியையும். உணராது சந்தித்ததென்பது காரணகாரியப்பொருட் டாய் நின்றது: சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி ஆன்மா அவற்றினொன்றாயினும் சகசமலத்துணராமையால் அவற்றோடு சந்தித்தது சந்தித்தவழி அவையுந்தானும் அமைச்சரசேய்ப்ப நிற்றலான் அஞ்சவத்தைத்தாயிற்று என அதிகரணம் பகுத்துக்கோடற்கேற்ப வேறு வேறு வினைமுடிபு செய்துரைத் தலுமொன்று. வடமொழிச் சூத்திரத்தோதுதலின் ஈண்டும் ஆயினுமென வருவித்து ஒருதொடராக வைத்துரைக்க. அந்தக்கரணமவற்றினொன்றன்றாயினுமெனவே, அவற்றினொன்றன்றாதலும் அநுவாதமுகத்தால் ஈண்டேபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கரணமவற்றினொன்றன்றென்றதனை வேறு தொடராக வைத்துரைப்ப. அங்ஙனமுரைப்பின், முன் வருவனவற்றை அவாய்நின்று ஒருபொருண்மேல் வாராமையின் ஒரு சூத்திரமாதற்கேலாமையறிக. ஆன்மாவென்பது மேலைச் சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கற்பாலதாகவும், ஈண்டு வேறோதியது ஒத்து வேறாதல்பற்றி என்றுணர்க. ஆன்மாவென்னுஞ் சொற்குப் பொருள் வியாபகமென்பதூஉம் சித்தசித்தென்பதூஉமாம். மலத்து மலத்தாலென விரிக்க. அமைச்சரசு அமைச்சரொடு கூடிய அரசென உருபும் பொருளும் உடன்றொக்கன. காரணப்பொருட்டாய நின்றென்னும் வினையெச்சம் அஞ்சவத்தைத்தென்னும் வினைக்குறிப்பு முற்றோடு முடிந்தது. இதனுள் அந்தக் கரணமவற்றினொன்றன்றென்பது ஓர் அதிகரணம்; ஒன்றன்றாயினுஞ் சகசமலத்துணரா அமைச்சரசேய்ப்ப வவைசந்தித்ததென்றது ஓரதிகரணம்; அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத்தைத்தேயென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதல் அதிகரணம்

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தியகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

**மே**—ஏனையவெல்லாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் உயிராகா; "ஆயினும் மனமுதலிய அந்தக்கரணங்கள் *சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தையென்றும்" இங்ஙன முயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதல் உண்மையானும் இந்திரிய முதலியவற்றை அவ்வாறு கூறாமையின் அஃதாகுபெயரென்றற் கேலாமையானும் அவையே தனித்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென அந்தக்கரணான்மவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இது மேலைச் சூத்திரத்துள் ஓதற்பாலதேயாயினும் ஈண்டிலக்கணங் கூறும் வழியும் அவற்றோடு சந்தித்து அமைச்சரசேய்ப்ப நிற்பதென அவத்தைக்கேதுவாக எடுத்தோதவேண்டுதலின் ஈரிடத்துமெடுத்தோதுதல் "சில்வகை யெழுத்தின் செய்யுட்டாகிச்—சொல்லுங் காலைப் பெரும்பொரு ளடக்கி—நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னு மிலக்கணத்ததாய சூத்திரத்துக் கேலாமையான் அதுபற்றி விதிமுகத்தானன்றி அநுவாத முகத்தான் ஈண்டுணர்த்தப்பட்டது. ஈண்டு அந்தக்கரணமென்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப்பொருட்டு மனோபுத்தியகங்கார சித்தங்களிலெனக் கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரின் உயிர் வேறுண்டெனக்கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையானும் அமைச்சரோடு உவமிக்கப்பட்டு அதீதத்தினு நீங்காது உடனிற்பனவாய கலாதிகளன்மையானும் அவற்றை ஈண்டெடுத்தோத வேண்டாமையின் மனமுதலிய புறஅந்தக்கரணங்களே ஈண்டுக் கூற நின்றன வென்பது கருத்து.

அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

**ஏ**—†"மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு—மருவியான்மாவே யென்ன வரும்" என நீயிருங்கோடலின் உயிர் அவற்றுளொன்றுதலைமையுமென்றாற்படு மிழுக்கென்னையென்னுங்கடாவை

* சிவஞானசித்தியார், நான்காஞ் சூத்திரம் ௨௮. - புந்தியை.

† சிவஞானசித்தியார், நான்காஞ்சூத்திரம். ௨. கருவியா.



யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய் நின்றே தம்மை நோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ் சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்றென மேற்கொண்டது.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித்தறியும்; யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோவெனவும் இவ்வாறு சங்கற்பவிகற்பஞ்செய்தறியும்; யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும்; யானொருப்பட்டெழுந்தேனென்றறிய மாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும்; யானிச்சயித்தேனென்றறிய மாட்டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றொடு கூடி யான் சிந்தித்தேன் பற்றினேன் எழுந்திருந்தேன் நிச்சயித்தேனென்றும் அதன்பின் அதுவதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்கமோகரூபமாய்த் தன்மாட்டு வந்த புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடு கூடிநின்று இது சுகம் இது துக்கம் இது மோகமென்றறிந்தும் யான் சுகித்தேன் யான்துக்கித்தேன் யான் மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியுந் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்றாமாறி யாண்டையதென மறுத்தவாறாயிற்று.

*"இவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்புநோக்கி. ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தென்னும் பொருளவாம். ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்காராதற் சிறப்புப்பற்றி அமைச்சரை அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோலப் புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற்சிறப்புப்பற்றி மனம் புத்தியகங்காரஞ்சித்தம் நான்கும் மருவி யான்மாவேயென்ன உபசரித்துக் கூறப்படுமத்தனை யென்றொழிக. சூழ்ச்சித் துணையாதல்பற்றி

* சிவஞானசித்தியார், பதினொன்றாஞ்சூத்திரம். ௧௧. சிவன்சீவ.

அந்தக்கரணங்கள் அமைச்சரை யொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றாம். அது ஞானாமிர்தத் திற்காண்க. மேலைச் சூத்திரத்திலோதிய ஏதுக்களே ஈண்டைக்கும மையுமாயினும், சிறந்தமைபற்றி வேறேதுக்கூறினார்.

மனமாதி யால்உணர்தல் மன்னு புலன்கள்
மனமாதி மன்புலனின் அல்லன்—மனமேல்
உதித்தொன்றை உள்ளம் உணர்தல் அதனின்
உதிக்கும் கடல்திரையை ஒத்து.

உ—அவ்வந்தக்கரணங்கள் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் தம்மின் மேலுள்ளவற்றை நோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று. மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள் - மனமுதலிய அந்தக்கரணங்களாலுணரப்படுவன ஐம்பொறிகளாற் றரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்:—உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை - ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தொன்றனையாம்:—கடற்றிரையை ஒத்து உதிக்கும் - அவ்விருவேறுணர்வுங் கடலிடையெழுந்து கரைசாருந்திரை போலப் பரம்பரையின் ஆன்மாவின்மாட்டு வந்து தோன்றும்:—அதனின் மனம் ஆதி மன் புலனின் அல்லன் - அதனானே மன முதலியன அவ்விடயங்களின் வேறாயினாற்போல ஆன்மாவும் அம் மனமுதலியவற்றின் வேறாம்.

புத்தியிற்றோன்றியதொன்றாவது சுகதுக்கமோகரூப விடயம். பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற் காட்சியுணர்வு தோன்றி அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி அதன்பின் னர்த் தன்வேதனைக்காட்சியுணர்வு உயிரின்கண் வந்து தோன்றுதல். இதனானே அந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் மேலுள்ளவற்றை நோக்கி அசித்தாமாறும் உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டு கொள்க.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேறாம்
அவ்வேறாம் போதுபோல் ஆங்கு.



உ—மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களின் இயல்பு சிறப்புவகையாற் கூறுமுகத்தான் மானதக் காட்சியுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறா யுணர்வு நிகழுமா றுணர்த்தி உயிர்வேறாதலை வலியுறுத்துதனுதலிற்று.

உள்ளம் - புருடதத்துவமென நின்றவுயிர்,—ஆங்கு - வாயிற் காட்சியாற் கண்ட விடயங்களினொன்றனை மனமாதியானுணரும் மானதக் காட்சியின்கண்ணும் ஒரு பெற்றித்தாதலின்றி,—சித்தம் ஆய்ச் சிந்தித்து - சித்தமாய் நின்று இஃதியாதாகற்பாற்றெனச் சிந்தித்தும்,—மனம் ஆகிப்பந்தித்து - அதன்பின் மனமாய் நின்று இஃதின்னதாகற்பாற்றெனப் பற்றியும்,—ஆங்காரம் ஆய்த் தெளியாது - அதன்பின் அகங்காரமாய் நின்று இஃதாமோ அன்றோ இதனை இன்னதெனத் தெளிவேன் யானெனத் தெளிவு பிறவாதெழுந்தும்,—புந்தி ஆய் ஆய்ந்து - அதன்பின்னர்ப் புத்தியாய் நின்று இஃதின்னதெனத் தெளிந்தும்,—வெவ்வேறு தானே துணிந்து இவ்வேறாம் - இங்ஙனம் வெவ்வேறாகவே யுணர்தலான் அவ்வாறுணரும் புருடன் இவ்வந்தக்கரணங்களின் வேறாம்,—போது அவ்வேறாம் போல் - ஞாயிறு முதலியவற்றோடு கூடிநின்று நாழிகை நாள் பக்கந் திங்கள் ஆண்டு முதலியனவாய்ப்படும் பாகுபாடு செய்யுங் கால தத்துவம் அஞ்ஞாயிறு முதலியவற்றின் வேறாயினாற்போல்.

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம்சித்தம் விந்துப்—பகாஇவற்றை
நாதம் உளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

உ—அம்மானதக் காட்சியினிகழுஞ் சவிகற்ப உணர்விற்கேது வாய் அவற்றையுடனின்று செலுத்தும் அக்கரங்கள் இவையென்பதும் அவற்றுணர்வு மாறிமாறித் தோன்றுமாறு முணர்த்துதனுதலிற்று.

அகாரம் அகங்காரம் - அகரம் அகங்காரத்தினையும்,—உகாரம் புத்தி - உகரம் புத்தியினையும்,—மகாரம் மனம் - மகரம் மனத்தினையும்,—விந்து சித்தம் - விந்து சித்தத்தினையும்,—நாதம் உளவடிவு - நாதம் உயிரினையும் செலுத்துதல்பற்றி,—கடற்றிரையே போன்று - சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரைதோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோல, — போதம் — மாசகலத்தின்கட் கணந்தோறும்

உணர்வு,—ஆம் - உதித்தும் ஒடுங்கியும் வரும்,—பகாது இவற்றை நாடில் - பகுக்காது இவ்வக்கரங்களை ஆராயின்,—பிரணவமாம்-பிரணவமாகும்.

*"மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை - யுன்னுமுகார முபசரிக்கு—முன்னுகு - மாங்காரந் தன்னை அகாரஞ் செலுத்தியிடு - நீங்காத சித்தம் விந்துநேர்" என்பவாகலானும் ஈண்டோதிய துறையே முறையெனவும் †"அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி அகங்காரங்கள்" என வழி நூலாசிரியரே ஓதியது எதிர் நிரனிறைப் பொருளெனவுங் கொள்க. "அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி அகங்காரங்கள்" என்றதே முறையெனக் கொண்டு அதற்கியையக்கொண்டு கூட்டி யுரைப்பாருமுளர்.

பகாதிவற்றை நாடிற் பிரணவமாமெனவும் போன்றுமெனவுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களைக் கூறுவார் ஒப்புமைபற்றிப் புருடனைச் செலுத்தும் அக்காமும் உடன்கூறினார்.

உடனின்று செலுத்துதல்பற்றி அபேதமாக வைத்தோதப்பட்டன.

‡"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப்பற்றி" அகரமுதலிய பஞ்சகலை வடிவாய் நின்று இவற்றை வேறு வேறு செலுத்துதல்பற்றிக் கணந்தோறும் நினைப்பு மறப்புமாகிய சகல கேவலங்கள் அதிநுட்பமாய்க் கறங்கோலைபோல மாறி மாறி நிகழுமெனவும் மாசகலத்தின்கட் கணந்தோறும் அங்ஙனமுணர்வுதித்தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரை தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலு மெனவுமுணர்க. கடற்றிரையுவமை மேற் பரம்பரையாய் உணர்வு வருதற் கெடுத்துக் காட்டினர்; ஈண்டுப் புதிது புதிதாய் வருதற்கெடுத்துக் காட்டினர்; ஆதலாற் புனருத்தியன்மை யுணர்க.

> எண்ணில ஓங்காரத் தீசர் சதாசிவமா
> நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்

---

* துகளறுபோதம் - கச.

† சிவஞானசித்தியார், நான்காஞ்சூத்திரம் - ரு-

‡ ஷை, முதற்சூத்திரம் - உச.



> பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
> மகாவுக ரம்மகரத் தாம்.

உ—அவ்வக்கரங்களுஞ் சடமாகலின் அவற்றை அதிட்டிக்கும் அதிதெய்வங்கள் இவையென்பதுணர்த்துதனுதலிற்று.

எண்ணில வோங்காரத்து நண்ணிய விந்துவொடு நாதத்ததிதெய்வங் கண்ணில் ஈசரொடு கூடிய சதாசிவமாம். அகரவுகரமகரத்ததிதெய்வங்கண்ணிற் பகரயன்மாலோடு பரமனும்.

எண்ணிலவு - மானதக்காட்சியின்கண் நிலவிய,—ஓங்காரத்து - பிரணவத்தின் கண்ணே,—நண்ணிய - பொருந்திய,—நாதத்து - நாதத்திற்கும்,—விந்துவொடு - விந்துவிற்கும்,—அதிதெய்வம் - அதிதேவதையை,—கண்ணில் - கருதுமிடத்து,—சதாசிவம் - சதாசிவமும்,—ஈசராம் - மகேசனுமாம்,—மகர உகர அகரத்து - மகர உகர அகரங்கட்கு,—(அதிதெய்வம் கண்ணில்) - அதிதேவதையைக் கருதுமிடத்து,-பரமன் மாலோடு பகர்அயனும்-முறையே சுத்தவித்தையின் வைகுவோராகிய உருத்திரனும்மாலும் சொல்லப்படும் அயனுமாம்.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைகுவோரை. பரமன் உருத்திரன்.

## இரண்டாம் அதிகரணம்

இனி இவ்வான்மாச் சகசமலத்தினுல் உணர்வின்றென்றது.

மே—ஆன்மா அந்தக்கரணங்களினுென்றன்றாயின் அவற்றொடு சந்தித்து நிற்றற் கேதுவென்னையென அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

ஆகந்துகமலங்களி னீக்குதற்குச் சகசமலமென விசேடிக்கப்பட்டது: படவே உயிர் முதல்வனைப்போல் அந்தக்கரண முதலியவற்றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற் களிம்புபோல வேறுகாரணமின்றி மூலமலந் தன்னோடு உடனாய் நிற்றலிற் றன்னியல்பானுணருமாறின்றிக் கருவிகளைக் கூடி நின்றுணர்வதாயிற்றெனவிடுவித்தவாறாயிற்று. இதனானே மலத்துளதாமென மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங் கூறினு

ரென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தினிகழும் இயல்பே மலத்திற்குத் தன்னியல்பு கருவிகளோடு கூடி அவத்தையுறுவதாகிய விபரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழும் இயல்பே பொது இயல்பாகலான், மலத்திற்கு இருவகை இலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

ஏ—சகசமலத்தினால் உணர்வின்றியொழியிற் பின் கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமாறியாங்ஙனமெனச் சற்காரிய வாதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

அச்சகசமலமாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனை இல்லையென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் இனி இவ்வான்மாச் சகசமலத்தினால் உணர்வின்றென மேற்கொண்டது.

மலத்தினதிலக்கணம் வடமொழி வழக்குப்பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும் அதனைத் தமிழ்மொழியான் விளக்குவார் மறைத்துக்கொடு நிற்றலாலெனவுங் கூறினாராகலான், அது கூறியது கூறலன்மையுணர்க. திரோதகமென்னும் வடமொழி மறைத்தலைச் செய்வதென்னும் பொருட்டாய் வினைமுதன்மேனின்ற வினைப் பெயர்.

இதனானே ஞானபாவமே அஞ்ஞானமென்பார் மதமும் மறுக்கப்பட்டது; அபாவம் ஒரு காரியத்தைச் செய்யமாட்டாமையின்.

மாயா தனுவிளக்காம் மற்றுள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்தொன்றும் காட்டம்போல்
தன்னைமலம் அன்றணைதல் தான்.

உ—ஆகந்துகமலமே ஞானதிரோதகமாதலமையும் வேறுமோர் மலமுண்டென்றல் மிகைபோலுமென ஐக்கவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செயப்படுங் காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை பெரிதாமாறுணர்த்துமுகத்தான் ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.



உள்ளம் மாயா தனு விளக்கு ஆக் காணாதேல் ஒன்றை ஆயாது ஆம் - உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயா காரியமாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணாதாயின் ஒரு விடயத்தையும் அறிவதில்லையாம்,—மற்று மலம் தன்னை அன்று அணைதல் தான் - சகசமலம் உயிரை அநாதியே பற்றிநிற்றல்,—அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம்போல் - காட்ட முதலியவற்றுள் அதுவதுவேயாய் நின்றுந் தனக்குக் கேடில்லாத வன்னியைத் தனக்குண் மறைத்து வைத்து ஒன்றேயாய் நிற்குங் காட்டம்போலும்.

எனவே, காட்டாய் நின்று விடயங்களையறியும் வண்ணம் உயிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடைசெய்து கொண்டு நிற்றல் மலத்தின் செய்தி; இவ்விரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல் இகலி நிற்பனவாகலான், அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாறாயிற்று. வன்னி அது அதுவாதல் காட்டத்துண் மறைந்துழிக் காட்டமேயாயும் சூரியகாந்தத்துண் மறைந்துழி அதுவேயாயும், இவ்வாறே அவ்வவற்றின் மறைந்துழித் தானென்ப தொன்றில்லை யென்னும்படி நிற்றல். அங்ஙனமாகியும் வீயாமை, கடைதன் முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெற்றாம். தன்னுண் மறைத்தல் - வன்னியென்பதொன்றில்லை யென்னும்படி பொதிந்துகொண்டு தானே யாதல். ஒன்றாங்காட்டம் ஒன்றேபோல் அத்துவிதமாங் காட்டமென்றவாறு.' இவ்வாறு உவமைக்கோதிய அடையுந் தொழிலும் இயையும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க. மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணைதலென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது - ஞானபாவமென்பாரும், பிராந்திஞான மென்பாரும், தமோகுண மென்பாரும், பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சை யென்பாரும், மாயை கன்மங்களென்பாரும், சிவசத்தி யென்பாரும், உயிர்க்குண மென்பாருமாய், அவ்வச் சமயநூல்பற்றி மயங்குவாருமுளர். அம்மலத்திற்குப் பற்றுக்கோடாகிய சூனிய முதலியவற்றின் வேறெனப்பட்ட ஆன்மாவும் இயற்கையாற் சடமென்பாரும், அறிவுமாத்திரையேயெனக் குணிப்

பொருளன் றென்பாரும், சுதந்திரவறிவுடைத் தென்பாரும், அவ்வவ் வுடம்பளவிற் றென்பாரும், அணுவளவிற் றென்பாரும், உருவென் பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமாய், இன்னும் பல திறப்படக் கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

இச்சகசமலம் - ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய்ச், செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதிபந்தமாய்ச், சடமுமாய்ப், பலவுமாயின் அழிவெய்துமாகலின், அநாதிபந்தமாதல் பெறப்படாமையின், ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப்பாகுபாட்டிற் கேதுவாய், உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று தத்தங் காலவெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலவுடைத்தாய், உயிர்கண் மூன்றவைத்தைகளும் படு[illegible]கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகவுயிர் அணுத்தன்மைபடுமாறு செய்தலின் ஆணவமென்னும்பெயர்த்தாய்ப், பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதியென்றற் றொடக்கத்துக் காரணக் குறிகளுமுடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்த கண் ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியையிழந்து இருளினமுழ்ந்துமாறுபோல, முதல்வன் சந்நிதியி னிற்பினுஞ் சோபானமுறையின் அறிவிக்க அறியுந்தன்மைத்தாய உயிர் அநாதியே யறிவித்தால் அறியமாட்டாமையின், அம்மாட்டாமையான் அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவு முணர்க. அநாதியே மலத்தினீங்குதல் முதல்வன்வினையாய் அநாதிமுத்தத்தன்மையென *எண்குணங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்ப முடிந்தாற்போல அநாதியே மலத்தைப்பற்றுதல் உயிரின் வினையாய்

* எண்குணங்களாவன :—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவைமுறையே - சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயான்மா, சருவஞ்ஞத்துவம், அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி எனப்படும்.



உயிர்க்குற்றங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லாம் ஈரிடத்துமொக்கும்.

## மூன்றும் அதிகரணம்

இனி இவ்வான்மாச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியா தீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமென்றது.

மே—இருளினகப்பட்ட கண் விளக்கோடு கூடியவழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தைப்படுமாறில்லை. அதுபோல மலத்திலகப்பட்ட உயிர் கருவிகளோடு சந்தித்தவழி ஒருதன்மைத்தாயறிதலே அமைவுடைத்து. அவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தோதிய முறையான் ஐம்புலனறிந்தும் ஒடுக்கமறிந்தும் உண்டி வினையின்றிக் கிடந்தும் உணர்த்தவுணர்ந்தும் இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப்படுமாறியாங்ஙனமென அவர்கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. அவத்தையெனப்படுவன பலவுளவாகலின் அவற்றுள் ஈண்டு ஐந்தவத்தையெனப்பட்டவை யாவையென்னும் ஐய நீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார். அவத்திதன் என்னும் வடமொழி ஆடூஉவறிசொல்லாற் கூறியது அம்மதம்பற்றி. அமைச்சரசேய்ப்ப நிற்றலானென்பதூஉம் ஈண்டு வருவித்துரைத்துக்கொள்க. கொள்ளவே, *"படைகொடு பவனிபோதும்" வேந்தன் "கடைதொறும் விட்டு விட்டுக் காவலுமிட்டு" அந்தப்புரத்திற் செல்லுமாறுபோல ஆன்மா அங்ஙனம் அஞ்சவத்தைப்படுதல் அமைவுடைத்தென விடுத்தவாறாயிற்று.

அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

ஏ—அரசன்போல் உயிர் அங்ஙனமஞ்சவத்தைப்படுமாயின் வியாபகத்திற்கிழுக்காய் முடியும்போலுமென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அவ்வுயிர்தான் மலவடிவின்

* சிவஞானசித்தியார், நான்காஞ்சூத்திரம். ௫௨.

மறைப்புண்டவழி அருவுடம்பாகிய தத்துவசொரூபியாய் நிற்றலான் அத்தத்துவங்கள் தொழிற்படுமவத்தை வேறுபாடுபற்றி இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமென மேற்கொண்டது *"சீவனே வியாபி யவத்தையி விழிந்து திரும்புதல் குற்றமாங் கருவி சேருதல் பிரித லில்லையா முறையிற் செயப்படுங் கருவியே தெரியுந்—தாவிலா வறிவு தங்கின விடமே தகுமுயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இப்பொருள்பற்றியென்க. தத்துவவன்னரூபனாதல் வீடுபெற்றுழியும் உண்டுபோலுமென்று ஆசங்கை நிகழாமைப்பொருட்டு, மலசொரூபத்தின் மறைந்தெதன மேற்கூறிப்போந்ததனை வழி மொழிந்துகொண்டு அரூபசொரூபியாய் நிற்றலானென்று ஏதுக்கூறினார். மறைந்தவழியென்றது மறைந்தெனத் திரிந்துநின்றது.

ஒன்றணையா மூலத்(து) உயிரணையும் நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்தின்—மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலில் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

உ—தத்துவங்கள் தொழிற்படுதற்கண் நிகழும் அவத்தை வேறுபாடு தெரித்துணர்த்தி அஃதேதுவாதலை வலியுறுத்துதனுதலிற்று.

நல்நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம் கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி) விட்டு அகன்று வேறு (ஐயைந்தாம்) இதயத்திற் சித்தஞ் சென்றணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என வியையும்.

சாக்கிரத்தான மெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சொப்பனத்தான மெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும் விட்டு நீங்கி வேறாய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சுழுத்தித்தான மெனப்படும் இதயத்தின் அவற்றுள் இருபத்திரண்டு கருவிகளை விட்டு நீங்கி முன்னர்க்கூறப்படும் இரண்டுகருவிகளோடுகூடிய சித்தந் தொழிற்படும்; துரியத்தானமெனப்படும் உந்தியிற் சித்தத்தையும்விட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுங் கூடித்தொழிற்படும்; இக்கருவியொன்றும் அணையாத

* உலகுடையநாயனார் கழிநெடில். ங.



அதீதத்தான மெனப்படும் மூலாதாரத்தில் புருடனொன்றே நிலைபெறும். எனவே, இலாடத்தானமுதலிய ஐந்தினும் நிற்குங் கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமென்பது போந்தவாறுணர்க. வருகின்ற சூத்திரத்தின் மெய் வாய் கண் மூக்கு எனச்செய்யுட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் செவியாதியென்னாது மெய்யாதியென்றார். அவற்றொடு கூடிய இருபத்தைந்தாவன: அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும் அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக்கரணங்களான்கும் அவற்றோடு கூடி அவத்தையுறுவதாகிய புருடனொன்றும், அஃதவத்தையுறுதற்குரிய மதுகைக்கேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணாதி வாயுக்கள் பத்துமென இவை. ஈண்டுச் சத்தாதியென்றது வசனாதிபோலும் விடயங்களையெனக்கொள்க. எனவே, பூதங்களின் கூறாய் அவற்றுடனின்று தொழிற்குத் தேருறுப்புப்போல இந்திரியங்களின் றொழிற்பாட்டுக்கு மதுகையை விளைத்து நிற்பனவாய புறக்கருவியறுபதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஒழித்தொழிந்த புறக்கருவிகள் நாற்பதும் அவற்றையுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வலியாயுடனிற்பனவாய சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரைகளைந்துமென்னும் ஐம்பதுகருவிகளுங் கீழ்நோக்கியசாக்கிரத்தானத்தில் தமது சத்தி மடங்கி வினைக்கீடாகத் தொழிற்படாதொழியுமெனவும், அவை யொழிந்தவழி அவத்தைக் கேதுவாய் நின்ற ஏனைப் பொறிமுதலிய முப்பத்துநான்கும் அவற்றோடு கூடிய புருடதத்துவமும் இருவகைப்பூதங்களானும் புறக்கருவிகளானுந் தரப்படும் மதுகையின்மையின் ஆண்டுப் பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங் கொள்க. கலாதிகளுஞ் சுத்தத்துவமும் அவத்தைக்கேதுவாகாமையான் உடனெண்ணாராயினர். ஏனையவும்விரிந்த நூல்களுட் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே
அவ்வவ் இந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது வாங்கு.

உ—அங்ஙனம் அதீதத்தையெய்திய புருடன் மீளப் பிரோக அவத்தையாகிய உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அநுவாதமுகத்தான் விளக்கி அவ்விடத்தினும் முறையிற் செலுத்தும் பிரோகக் கருவிகளைந்தின் தொழிற்பாடுபற்றி ஐந்தவத்தை நிகழுமென்பதூஉம் அவை இவையென்பதூஉஞ் சுத்தாவத்தையும் இவைபோலுண்டென்பதூஉங் கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம் - இலாடத்தானத்தினீங்கி ஆண்டாண்டவத்தைப்பட்டுக் கீழ்ப்போந்து மூலாதாரத்தினெய்தியபின் மறித்தும் அவ்வாறே ஆண்டாண்டவத்தைப்பட்டு மேற்சென்று இலாடத்தானத்தின் உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்பட்ட புருடன்,—இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும் - ஆண்டுஞ் சாக்கிரச் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுறும்:—இலாடத்தே அவ்வவ்விந்திரியத்து அத்துறைகள் கண்டு - அவையாவன அவ்விலாடத் தானத்தின்கண்ணே அவ்வப்பொறிகளான் அவ்வவ்விடயங்களை யுணர்ந்து,—அதுவே - அப்போ தப்போதே,—அவ்வவற்றின் நீங்கல் - அவ்வவ்விடயங்களினீங்குதலாம்.—அது ஆங்கு - இனி முன்னர்க்கூறப்படுஞ் சுத்தாவத்தையும் இவைபோல ஐவகைப்படும்.

மேற்செல்வுழி ஆண்டாண்டுப்படுமவத்தைகளுங் கீழ்ச்செல்வுழிப் போலன்றி விசேடமின்மையின் வகுத்தோதாது இலாடத்தே சாக்கிரத்தையெய்திய வுள்ளமென அநுவாதமுகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கனாக்காண்டலுண்டென்பது முறையே ஞானாமிர்தத்தினும் போற்றிப்பஃறொடையினுங் காண்க.

அவ்வவ்விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனாதற்குரிய விடயம். அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்டகண்டபொழுதே அயர்த்துவிடுதல். *"ஒன்றன்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கியென்க.

---

*சிவஞானசித்தியார், இர[illegible]த்திரம். கூச. ஒருபுலனுகரு.

187/60

தொடுத்து இவ்வாண்டு விழாவை நடத்திவைத்தது சைவ நன்மக்கட்கு பேருவகையைத் தருகின்றது.

முதல்நாள் (5-10-34) வெள்ளிக்கிழமை மாலை இராயப்பேட்டை சுந்தரேசப் பெருமான் ஆலயத்திலிருந்து ஸ்ரீலஸ்ரீ தலைவரவர்கள் மேளவாத்திய முதலிய மரியாதைகளுடன் ஊர்வலமாக வரவேற்கப் பெற்றார்கள். நல்வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்ட பின்னர் சுவாமிகள் தமது அருமருந்தன்ன தலைமையுரையை நிகழ்த்தினார்கள். பிறகு திரு. பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ., திருப்புகழ் என்பதுபற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தினார்கள். சுவாமிகள் கருத்துரையை விரிவாகத் தெரிவித்து முருகப் பெருமான் திருவுருவத்திலுள்ள பல தத்துவப் பொருள்களை விளக்கினார்கள். இரண்டாம் நாள் மாலை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மையாரும், திரு. தெ. பொ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை. எம். ஏ., பி. எல். அவர்களும் முறையே ஆண்டாள் அருள்மொழி, கந்தபுராணம் என்பனபற்றியும், மூன்றாம் நாள் மாலை திருவாளர்கள் - ம. பாலசுப்பிரமணிய முதலியாரும், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களும், ஸ்ரீமதி ஈ. த. இராஜேசுவரியம்மையாரும் முறையே மணிவாசகம், சிதம்பர சுவாமிகள், திலகவதியார் என்பனபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். சுவாமிகள் கருத்துரையையும் விரிவாகத் தெரிவித்தார்கள். நான்காம்நாள் மாலை சுவாமிகள் தாயுமானார் என்னும் பொருள்பற்றி கடன்மடை திறந்தாற்போல அனைவரும் வியக்கும் முறையில் சொற்பெருக்காற்றினார்கள். திருமுறை உத்ஸவம், அட்டிட்டல், வந்தனை முதலியன நிகழ்ச்சி முறைப்படி நடைபெற்றன.

இச்சபை ஒரு சபாமண்டபம் கட்ட முயற்சித்து வருகிறது. அதற்கு அனைவரும் பொருளுதவி புரியுமாறு வேண்டுகிறோம்.

உ

# தொல்காப்பிய வெளியீடு

அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய ஐந்தும் அடங்கிய தொல்காப்பியப் பொருளதிகார முதற்பாகம் நச்சினார்க்கினியருரையுடன் ஓலைப்பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து மன்னார்குடி இலக்கண வித்வான் திரு. ம. நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்களது அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் சென்னை, இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தில் பதிக்கப்பெற்று வருகின்றது. நாளது அக்டோபர் 31-உக்குள் வெளிவரும். விலை ரூ. 4-0-0. ரெயில்வே, தபாற்செலவு வேறு. வேண்டிய அன்பர்கள் நமது சமாஜத்திற்காவது அல்லது சாது அச்சுக்கூடத்திற்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சிவஞானபோதமாபாடியம்—விலை ரூ. 6.

**சிலபிரதிகளே உள்ளன. உடனே எமக்கு எழுதுக.**

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 7. No. 10.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

# அப்பர் நாடகம்

இந்நாடகம் நான்கு அங்கங்களையும் பன்னிரண்டு காட்சிகளையும் உடையது. மாணவர் கழகங்களும் சைவசபைகளும் நடிப்பதற்கென்றே திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பெற்றது. இந்நாடகத்தைப் படித்தவுடன் பெரியபுராணத்தைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இயல்பாகத் தோன்றும்.

தனிப்பிரதி விலை அணா 2. தபாற்கூலி அணா 1.
பத்து பிரதிகள் விலை ரூ 1. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 8.

உடனே சைவசித்தாந்த மகாசமாஜத்துக்கெழுதி பிரதிகளைப் பெறுக.

---

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# பெரிய புராணம்

## சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு

இப்பதிப்பில் பெரியபுராணத்தின் மூலம் செம்மைபாகவும் திருத்தமாகவும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு செப்பஞ் செய்யப்பெற்று அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. சேக்கிழார் வரலாறு, காலஆராய்ச்சி, நாயன்மார் அட்டவணை, அரும்பொருள் அகராதி, சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் திருவந்தாதி, புராணசாரம், இதுவரை எந்தப் பதிப்பிலும் வெளிவராத பாட்டு முதற்குறிப்பகராதி முதலியன இப்பதிப்பில் விளங்குகின்றன.

தனிப்பிரதி விலை ரூ 1— 6—0
ரிஜிஸ்தர் தபாற்கூலி 0—10—0
ஆறுபிரதிகள் விலை ரூ. 7— 8—0 தபாற்கூலி வேறு.

**பன்னிரு திருமுறைகள்:**—சமாஜப் பதிப்பு ரயில்வே பார்சல் மூலம் அனுப்பத் தபாற்கூலி விலையுட்பட ரூ 6/-(ரயில்சார்ஜ்மட்டும் வாங்குவோர் செலுத்தவேண்டும்.)

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 18, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.